## பள்ளிக் கல்வித்துறை
## சேலம் மாவட்டம்

# மேல்நிலை இரண்டாம் ஆண்டு

# தமிழ் முதல் தாள்

# முக்கிய வினா - விடை - வங்கி

# 2012 - 2013

வெளியீடு
முதன்மைக் கல்வி அலுவலர்
சேலம்.

## தமிழ் ஆசிரியர் குழு

1. அ. அம்பிகா, **M.A.,B.Ed.,M.Phil.,** ஸ்ரீராமகிருஷ்ண சாரதா மேல்நிலைப் பள்ளி, சேலம் -5
2. ம. சாந்தா, **M.A.,M.Ed.,M.Phil.,** பாரதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, சேலம் -7
3. இரா. இராமமூர்த்தி, **M.A., M.A.,(His),M.Ed.,M.Phil.,** அரசு மேல்நிலைப் பள்ளி, பனமரத்துப்பட்டி.
4. சு. தேவி, **M.A.,B.Ed.,M.Phil.,** வைதீஸ்வரா மேல்நிலைப் பள்ளி, மேட்டூர்.
5. வை. கல்பனா, **M.A.,B.Ed.,M.Phil.,** அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, சேலம் -1.
6. ப. மஞ்சுளா, **M.A.,B.Ed.,M.Phil.,** அரசு மேல்நிலைப் பள்ளி, புதுச்சாம்பள்ளி
7. ச. பொற்கொடி, **M.A.,B.Ed.,M.Phil.,** அரசு மேல்நிலைப் பள்ளி, வேம்படிதாளம்.
8. நா. சித்ரா, **M.A.,B.Ed.,M.Phil.,** அரசு மேல்நிலைப் பள்ளி, வனவாசி.
9. கா. தங்கமணி, **M.A.,B.Ed.,M.Phil.,** அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, மகுடஞ்சாவடி.

## அதிக மதிப்பெண்கள் பெற அறிவுரைகள்

1. 3 வாழ்த்து வினாக்களைப் படித்தால் 1 உறுதியாக இடம்பெறும்.
   சிற்றிலக்கியங்களில் உள்ள 4 வினாக்களைப் படித்தால் 2 உறுதியாக இடம்பெறும்.
   மறுமலர்ச்சிப்பாடல்களில் உள்ள 4 வினாக்களைப்படித்தால் 2 உறுதியாக இடம்பெறும்.
2. நெடுவினாவில் 3 வினாக்கள் இடம்பெறும்.
   1. திருக்குறளில் உள்ள 4 நெடுவினாவில் 1 உறுதியாக இடம்பெறும்
   2.தொடர்நிலைச் செய்யுளில் உள்ள 6 நெடுவினாவில் 1உறுதியாக இடம்பெறும்
   3. மறுமலர்ச்சிப்பாடல்களில் உள்ள 7 நெடுவினாவில் 1 உறுதியாக இடம்பெறும். மேற்கண்ட இம் 3-ல் நீங்கள் விரும்பும் 1 பகுதியைத் தெளிவாகப் படித்தால் போதும்.
3. பாடலடிகள் கொடுத்து 1 மதிப்பெண் வினாக்கள் 4 இடம்பெறும்.
   பாடலடிகள் பெரும்பாலும் தொகைநூல்கள், தொடர்நிலைச்செய்யுள், மறுமலர்ச்சிப்பாடல்களில் இடம்பெறும். பாடலடிகள் இடம்பெறும் நூல், ஆசிரியர், யார் யாரிடம் கூறியது, பொருள் என்ற முறையில் படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம்.
4. இத்தொகுப்பில் உள்ள சொற்களுக்கு மட்டுமாவது உறுப்பிலக்கணம். இலக்கணக்குறிப்பு, புணர்ச்சி விதி, திணை, துறை, அணி எழுதத்தெரிந்திருந்தாலே போதுமானது. முழுமதிப்பெண்கள் பெறலாம்.
   திணை, துறை வினாக்கள் 2 இடம்பெறும்.
   1. பொதுவியல் திணை (அ) முல்லை, நெய்தல், குறிஞ்சி, பாலைத்திணை.
   2. பொருண்மொழிக்காஞ்சித்துறை (அ) அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூற்றில் உள்ள துறைகள்.
   மேற்கண்ட இந்த 2 ல் 1 பகுதியைத் தெளிவாகப்படித்தால் போதும்.
5. 1 மதிப்பெண் வினாக்களைப் பொறுத்தவரை இத்தொகுப்பில் இடம்பெற்றவற்றை மீண்டும் மீண்டும் பயற்சி செய்தால் முழுமதிப்பெண்கள் பெறலாம்.
6. விடைகளை எழுதிப்பாருங்கள். அடித்தல் திருத்தல் இன்றி விடைகளை எழுதுங்கள். கையெழுத்தும் தெளிவாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் விடைத்தாள் திருத்தும் ஆசிரியரிடம் உங்களது மதிப்பு உயரும், மதிப்பெண்ணும் உயரும், நம்மால் முடியும் என்ற நம்பிக்கையோடு படித்துத்தேர்வை எதிர்கொள்ளுங்கள் வெற்றி நிச்சயம்!.

âU. ïuh.<°tu‹, M.A.,M.Ed.,
Kj‹ik¡ fšÉ mYty®,
nry« kht£l«.

# thœ¤J klš

Ka‰á âUÉid M¡F« Ka‰Wï‹ik
ï‹ik òF¤â ÉL« - âUtŸSt®

ï¡fšÉah©oš nry« kht£l¤âYŸs mid¤J nkšÃiy¥gŸË khzt®fS« 100 rjåj« nj®¢á ÉG¡fh£oid¥ bgW« tifÆš nkšÃiy¡fšÉÆš cŸs 12 ghl§fS¡F Äf K¡»akhd nfŸÉfŸ k‰W« ÉilfŸ bjhF¤J tH§f¥g£LŸsd.

j§fŸ gŸËÆ‹ üW ÉG¡fhL nj®¢áÆid ïy¡fhf¡ bfh©L brašgLkhW nf£L¡bfhŸ»nw‹. khzt®fË‹ vâ®fhy« áw¡f áwªj gÆ‰áÆid tH§» ekJ kht£l¤âš nj®¢á ÉG¡fh£oid ca®¤âl mid¤J tifÆY« áw¥ghf¢ brašgl vdJ thœ¤J¡fis¤ bjÇÉ¤J¡ bfhŸ»nw‹.

bkJthf¡f‰F« khzt®fS¡F« mâf kâ¥bg©fis¥ bgw ÉU«ò« khzt®fS¡F« V‰w tifÆš Ñœ¡f©l 12 ghl§fS¡F f£lf§fŸ jahÇ¡f¥g£LŸsd.
1. jÄœ, 2. M§»y«, 3. fÂj«, 4. ïa‰ãaš, 5. ntâÆaš, 6. cÆÇaš, 7.Éy§»aš, 8. jhtuÉaš, 9. tuyhW, 10. bghUËaš, 11. tÂfÉaš, 12. fz¡F¥gâÉaš.

nry« kht£l khzt®fŸ muR bghJ¤nj®Éid vËjhf nj®î vGâ nj®¢á bg‰W mâf kâ¥bg©fŸ bgW« tifÆš áwªj mDgtÄ¡f k‰W« mâf nj®¢á ÉG¡fh£oid bg‰W¤ jªj KJfiy MáÇa®fË‹ FGÉid¡ bfh©L nry« b#auh« fšÿÇ k‰W« it°ah fšÿÇ Ã®thf¤â‹ rh®ghf jahÇ¡f¥g£l ï¡f£lf¤ij¥ ga‹gL¤â x›bthU khztU« nj®¢á bgw thœ¤J»nw‹. muR¥ bghJ¤ nj®Éš mid¤J khzt®fS« bt‰¿ bgw c§fŸ gŸË¤ jiyikaháÇa® bgUk¡fS«, MáÇa¥ bgUk¡fS« c§fS¡F cWJizahf ïU¥gh®fŸ. mt®fË‹ tÊfh£LjÈ‹go ï¡ifna£oid go¤J midtU« nj®¢á bgw thœ¤J»nw‹.

m‹òl‹

(ïuh.<°tu‹)
Kj‹ik¡ fšÉ mYty®,
nry« kht£l«.

nry«
22-01-13

# 12 ஆம் வகுப்பு தமிழ் முதல் தாள்
## (அரசுத்தேர்வில் இடம்பெறும் முக்கிய வினாக்களும். விடைகளும்)
## I. சிறுவினா 4 x 2 = 8 மதிப்பெண்கள்
### 1. வாழ்த்து

1. கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்களை எழுதுக.
   1. கவிச்சக்கரவர்த்தி.
   2. கல்வியில் பெரியவன் கம்பன்.
   3. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.
   4. விருத்தம் என்னும் ஒண்பாவில் உயர்கம்பன்.
2. கம்பர் இயற்றிய வேறு நூல்கள் யாவை?
   1. ஏர் எழுபது
   2. சிலை எழுபது
   3. சரசுவதி அந்தாதி
   4. சடகோபர் அந்தாதி
   5. திருக்கை வழக்கம்.
3. தமிழரசி குறவஞ்சியில் பாட்டுடைத்தலைவனும், தலைவியும் யாவர்?
   1. பாட்டுடைத் தலைவன் - முருகப்பெருமான்
   2. பாட்டுடைத் தலைவி - தமிழரசி
4. நாமக்கல் கவிஞரை மாநில அரசும் நடுவணரசும் எவ்வாறு பெருமைப்படுத்தின?
   1. மாநில அரசு - அரசவைக் கவிஞர், தமிழகச் சட்டமேலவை உறுப்பினர் பதவிகள்.
   2. மத்திய அரசு - பத்மபூஷண் விருது.
5. நாமக்கல் கவிஞர் சிறை செல்லக் காரணம் என்ன?

   உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதால்.

### 2. தொகை நூல்கள்

6. எட்டுத்தொகை நூல்கள் யாவை?
   1. நற்றிணை
   2. குறுந்தொகை
   3. ஐங்குறுநூறு
   4. பதிற்றுப்பத்து
   5. பரிபாடல்
   6. கலித்தொகை
   7. அகநானூறு
   8. புறநானூறு
7. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை?

   மூவேந்தர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், படைத்தலைவர்கள், வீரர்கள், கடையேழு வள்ளல்கள், கடைச் சங்கப் புலவர்கள் எனப்பலருடைய வரலாற்றுக்குறிப்புகளையும், அக்கால மக்களின் வாழ்க்கை முறை முதலியவற்றையும் அறியலாம்.
8. அகநானூறு எத்தனை பகுதிகளாக உள்ளது? எழுதுக.

   மூன்று பகுதிகளாக உள்ளது.
   1. களிற்றுயானை நிரை - முதல் 120
   2. மணிமிடைப் பவளம் - அடுத்த 180
   3. நித்திலக்கோவை - இறுதி 100
9. கபிலரைப் புலவர் பெருமக்கள் எங்ஙனம் பாராட்டியுள்ளனர்?
   1. வாய்மொழிக் கபிலன்.
   2. நல்லிசைக் கபிலன்.
   3. புலனழுக்கற்ற அந்தணாளன்.
   4. பொய்யா நாவிற் கபிலன்.
   5. வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்.
10. தலைவனைத் தலைவி ஏன் கள்வன் என்று குறிப்பிடுகின்றாள்?

    பிறர் அறியாதவாறு தலைவியின் உடல் நலத்தைக் கவர்ந்ததால்.

## 3 திருக்குறள்

11. ‘வையகமும் வானகமும் ஒப்பாகா’ - எதற்கு?
   நாம் ஓர் உதவியும் செய்யாதிருக்கும் பொழுது, ஒருவர் நமக்குச் செய்த உதவிக்கு.
12. கடலின் பெரியது ஏன்?
   பயனை எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவி.
13. மறவற்க எனவும், துறவற்க எனவும் திருவள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?
   1. குற்றமற்ற நல்லவர் நட்பை மறவற்க.
   2. துன்பப்படும் பொழுது உதவியவர் நட்பைத் துறவற்க.
14. எதனை மறத்தல் எதனினும் நன்று?
   பிறர் செய்த தீமையைப் பொறுத்துக்கொள்வதைவிட மறத்தல் நன்று.
15. வன்மையுள் வன்மை எது?
   அறிவிலார் செய்த தீமையைப் பொறுத்தல்.
16. ஒறுத்தாரும் பொறுத்தாரும் எய்துவன யாவை?
   1. ஒறுத்தவர் - ஒருநாள் மட்டும் மனநிறைவாகிய இன்பத்தை அடைவர்.
   2. பொறுத்தவர் - உலகம் அழியும் வரை புகழினை அடைவர்.
17. அறிவுடையார், அறிவிலார் இயல்பினைச் சுட்டுக.
   1. பின்னர் வருவதை முன்னரே அறிபவர் அறிவுடையார்.
   2. பின்னர் வருவதை முன்னரே அறியாதவர் அறிவிலார்.
18. நடுங்கவரும் துன்பம் யாருக்கில்லை?
   பின்னர் வரும் துன்பத்தை முன்னரே அறிந்து தம்மைக்காத்துக்கொள்ளும் அறிவுடையவர்களுக்கு.
19. வினைத்திட்பம் என்பது யாது?
   எத்தனை துன்பம் வந்தாலும், எடுத்த செயலை முடிக்கும் மனவலிமை.

## 4. தொடர்நிலைச்செய்யுள்.

20. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள் யாவை?
   1. 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்'.
   2. 'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்'.
   3. 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'.
21. சுந்தர காண்டம் என்று பெயர்வரக் காரணம் யாது?
   1. அனுமனுக்குச் 'சுந்தரன்' என்ற பெயரும் உண்டு.
   2. அனுமனின் அருஞ்செயல்கள் இக்காண்டத்தில் கூறப்படுவதால்.
22. தேம்பாவணி - பொருள் கூறுக.
   1. தேம்பா + அணி = வாடாத மாலை
   2. தேன் + பா + அணி = தேன் போன்ற பாக்களால் ஆகிய மாலை.
23. வீரமாமுனிவரின் இலக்கியப்பங்களிப்பு எத்தகையது?
   1. இலக்கணம்.
   2. பெருங்காப்பியம்.
   3. சிற்றிலக்கியங்கள்.
   4. உரைநடை.
   5. அகராதி.
   6. மொழிபெயர்ப்பு.
24. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் யாவை?
   1. செந்தமிழ் இலக்கணம்.
   2. கொடுந்தமிழ் இலக்கணம்.
   3. சதுரகராதி.
   4. தொன்னூல் விளக்கம்.
   5. பரமார்த்த குரு கதை.
25. வீரமாமுனிவரின் மொழிபெயர்ப்புப் பணியை விளக்குக.
   திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்துள்ளார்.
26. கதிர்நாட்டு அரசன், அரசியார் பெயர்களை எழுதுக.
   1. அரசன் - கதிரைவேலன்.
   2. அரசி - கண்ணுக்கினியாள்.

27. அன்னம் வேலனைப் பற்றி வினாவியது யாது?

1. ஆத்தாவே இவர் யார்?
2. வேழநாட்டார் என்னைச் சிறைபிடிக்கையில் காப்பாற்றியது இவரோ?

28. பாவேந்தர் நூல்களுள் நான்கின் பெயர்களை எழுதுக.

1.குடும்பவிளக்கு.
2. இருண்டவீடு.
3. அழகின் சிரிப்பு.
4. பாண்டியன் பரிசு.

## 5. சிற்றிலக்கியங்கள்

29. 'உலா' என்பதன் பொருளை விளக்குக.

1. உலா - பவனிவரல். பாட்டுடைத் தலைவன் உலாவருவதைச் சிறப்பித்துப் பாடுவது உலா. 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
2. பேதை முதலான ஏழு வகைப்பட்ட பெண்கள் காதல் கொள்வதாகவும் பாடப்படும்.

30. 'அந்தாதி' - விளக்குக.

1. அந்தம் + ஆதி . அந்தம் ஆதியாக வருவது அந்தாதி. 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
2. ஒரு பாடலின் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்த பாடலின் முதலாக வருமாறு பாடுவது அந்தாதி.

31. மால் கழலின் சிறப்பாகத் திவ்வியகவி கூறுவன யாவை?

1. முதலை வாயில் அகப்பட்ட யானை அழைத்தபோது, அதைக் காப்பாற்ற திருமாலின் திருவடிகள் ஓடின.
2. கைகேயியின் சூழ்ச்சியால் காட்டில் நடந்தன.
3. அடியவர் துன்பம் நீக்க உள்ளத்தில் தங்கியிருந்தன.
4. திருவேங்கட மலையில் நிலைத்து நின்றன.

32. கலம்பகம் - பெயர்க்காரணம் தருக.

1. கலம் + பகம். கலம் - 12 பகம் -6
   பதினெட்டு உறுப்புகள் அமையப் பாடப்படுவது கலம்பகம்.
2. 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

33. முக்கூடலில் கூடும் ஆறுகள் யாவை?

1. தண்பொருநை.
2. சிற்றாறு.
3. கோதண்டராம ஆறு.

## 6. மறுமலர்ச்சிப்பாடல்கள்

34. மேகக் கூட்டங்கள் எவ்வாறெல்லாம் உருவகம் செய்யப்பெறுகின்றன?

1. தீயின் குழம்புகள்.
2. தங்கத்தை உருக்கிவிட்ட ஓடைகள்.
3. வெப்பம் வெளிப்படாமல் எரிகின்ற தங்கத்தீவுகள்.
4. நீலப்பொய்கைகள்.
5. கரிய பெரிய பூதங்கள்.
6. நீலநிறக்குளத்தில் மிதக்கின்ற தங்கப்படகுகள்.
7. பொன்கரையிட்ட கருஞ்சிகரங்கள்.
8. இருட்கடலில் மிதக்கின்ற தங்கத் திமிங்கலங்கள்.

35. நாடெங்கும் புத்தகசாலை ஏன் வேண்டும்?

1. மக்களிடையே அன்பு வளர வேண்டும்.
2. பரந்த மனப்பான்மை வேண்டும்.
3. தன்னலம் தகர வேண்டும்
4. உலகமக்கள் ஓரினத்தவர் என உணர வேண்டும்.
5. உயர்ந்த எண்ணங்கள் உருவாக வேண்டும்.
6. புனிதமுற்று வாழவேண்டும்.
7. அதற்கு நாடெங்கும் புத்தகசாலை வேண்டும்.

## 7. வழிபாட்டுப் பாடல்கள்

36. தேவார மூவர் யார்?
    1. திருஞானசம்பந்தர்.
    2. திருநாவுக்கரசர்.
    3. சுந்தரர்.

37. சுந்தரர் தம்பிரான்தோழர் என்றழைக்கப்படக் காரணம் யாது?
    சிவபெருமான் சுந்தரரைத் தம் தோழராய்க் கொண்டமையால்.

38. அற்புதப் பழ ஆவணம் காட்டி இறைவன் சுந்தரரை ஆட்கொண்ட ஊர் யாது?
    திருவெண்ணெய்நல்லூர்.

39. சின்னச்சீறா - விளக்குக.
    1. நபிகள் நாயகத்தின் முழுவரலாற்றையும் கூறும் நூல் 'சின்னச்சீறா'.
    2. இந்நூலை எழுதியவர் பனுஅகமது மரைக்காயர்.
    3. உமறுப்புலவர் சீறாப்புராணத்தில் நபிகள்நாயகத்தின் முழு வரலாற்றை எழுதாமல் போனதால், இந்நூல் எழுதப்பட்டது.

40. எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை இயற்றிய வேறுநூல்கள் யாவை?
    1. இரட்சணியக்குறள்.
    2. இரட்சணிய மனோகரம்.
    3. இரட்சணிய சமய நிர்ணயம்.
    4. போற்றித் திரு அகவல்.

## II பெருவினா 3 x 4 = 12 மதிப்பெண்கள்

### 1. வாழ்த்து

1. கம்பர் நன்றே நம்பி குடிவாழ்க்கை என வியந்து கூறுவதன் நயத்தை விளக்குக, (அல்லது) இறைவாழ்த்துப் பாடலால் அறியலாகும் செய்திகளைக் கூறுக.
    1. இறைவன் வடிவம் ஒன்றே என்பவருக்கு ஒன்றாகவும், வடிவம் பல என்பவருக்குப் பலவாகவும் உள்ளது.
    2. இறைவன் உள்ளான் என்பவருக்கு உருவாகவும், இல்லை என்பவருக்கு அருவுருவாகவும் உள்ளது.
    3. இறைவன் அவரவர் கூறுவதற்கு ஏற்ற இயல்பினையும், குணத்தையும் பெற்றுள்ளான்.
    4. ஒரு நிலையில் இல்லாமல் உரைப்பார் உரைப்பதற்கேற்றவாறு அமைந்துள்ள இறைவனின் இயல்புகள் வியப்பாக உள்ளன.
    5. இவ்வாறு இறைவனை வியந்ததோடு. இறைவன் அருளாலேயே இறைவனை அறிய இயலும் என்ற கருத்தை உணர்த்தியுள்ளார் கம்பர்.

2. வரதநஞ்சையப்பிள்ளை எக்காரணங்களால் தமிழன்னையை வாழ்த்துவோம் என்று கூறுகின்றார்?
    1. தமிழ் மொழியானது நமது இளமைப்பருவத்தில் முதன்முதலில் நாவை அசைத்துப் பேசவைத்தது.
    2. நம்முடைய அறிவாகிய கண்களைத் திறக்கச்செய்து உலகத்துப் பொருள்களை அறிந்து கொள்ளச் செய்தது.
    3. நம் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களைப் பிறர்க்கு எடுத்துரைக்கும் கருவியாக, 'நான் வருகிறேன்' எனக்கூறி நம் எதிரில் நின்றது.
    4. பிறமொழிகளை எளிதில் கற்பதற்கு உதவும் வளமையான மொழியாக உள்ளது.
    5. இக்காரணங்களால் வாழ்க வாழ்க என்று தமிழன்னையின் திருவடிகளை வாழ்த்துவோம் என்கிறார்.

3. இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும் ஏன்?
    1. இது இந்திய நாடு. எனக்கே உரிமையான நாடு என்று இந்தியர் தினமும் பாடவேண்டும்
    2. இந்தியர் விழிப்புணர்வில்லாமல் இருந்ததால் அந்நியர் நம்மை அடிமைப்படுத்தி ஆள நேர்ந்தது.
    3. நம் வாழ்வு மலர உதவமாட்டார்களா என வந்தவரையும், போனவரையும் நம்பியதே இந்தியர் வாடக்காரணம்.
    4. இன்றுமுதல் இந்தியர் ஒவ்வொருவரும் இந்தியநாடு எனக்கே உரிமையான நாடு என்று எண்ணுதல் வேண்டும்.

### இடம்பெற்றுள்ள 2 மதிப்பெண் முக்கிய வினாக்கள்

1. நாடோறும் எதனைப் பாடுதல் வேண்டும்? விடை வ.எண் 1ல் உள்ளது.
2. நாம் தூங்கிக் கிடந்ததால் நிகழ்ந்ததென்ன? விடை வ.எண் 2.ல் உள்ளது.
3. நாம் வாடியதற்குக் காரணம் என்ன? விடை வ.எண் 3ல் உள்ளது.
4. இத்தினம் முதல் நாம் எவ்வெண்ணத்தைக் கொள்ளல் வேண்டும் ? விடை வ.எண் 4ல் உள்ளது.

## 2. தொகை நூல்கள்

4. நரிவெரூஉத்தலையார் பயனில்லாத முதுமையுடையாரை விளித்துக் கூறுவனவற்றை எழுதுக.
   1. மீன் முள் போன்று நரைத்த முடியையும், தோல் சுருங்கிய கன்னங்களையும், பயனில்லாத முதுமைத்தோற்றத்தையும் உடைய சான்றோர்களே!
   2. மழுவாகிய ஆயுதத்தை ஏந்தி, வலிமை வாய்ந்த எமன் உம் உயிர்கவர வரும்பொழுது வருந்துவீர்.
   3. எனவே, பிறர்க்கு நன்மையைச் செய்யவில்லையென்றாலும், தீமையைச் செய்யாதீர். அச்செயலையே எல்லோரும் விரும்புவர்.
   4. அதுவே மறுமையில் உம்மை நற்கதி சேர்க்கும் வழி ஆகும் .

### இடம் பெற்றுள்ள 2 மதிப்பெண் முக்கிய வினாக்கள்

1. பயனின் மூப்பிற் சான்றோரின் முதுமைத்தோற்றத்தைக் கூறுக? விடை வ.எண் 1ல் உள்ளது
2. பயனில்லாத முதுமையுடையார் எப்பொழுது இரங்குவர் ? விடை வ.எண் 2ல் உள்ளது
3. பயனில்லாத முதுமையுடையாரிடம் நரிவெரூஉத்தலையார் வேண்டுவன யாவை? விடை வ.எண் 3, 4ல் உள்ளவை.

5. தலைவியைச் சந்தித்துச் செல்லும் தலைவனிடம் தோழிவரைவு கடாயவற்றை விளக்குக
   1. இறால்மீனின் முதுகு போன்ற சுரசுரப்பான அடிப்பகுதியையும், சுறாமீனின் கொம்பு போன்ற கூர்மையான முள்இலையையும், யானைத்தந்தம் போன்ற அரும்பையும் உடையது தாழை. மணம் வீசும் தாழையையும் கடலையும் உடையது நெய்தல் நிலம்.
   2. அத்தகைய நெய்தல் நிலத்தலைவனே! தேர்ப்பாகன் செலுத்த நீ உன் ஊருக்குச் செல்ல இருக்கிறாய். அவ்வாறு சென்றால், 'வருவேன்' எனக்குறிப்பிட்ட சிலநாள் வரை தலைவி உயிர் வாழ மாட்டாள். இதனை நன்கு அறிந்து செல்க என்றாள்.
   3. வரைவு + கடாதல் = வரைவு கடாதல்.

      வரைவு - திருமணம் : கடாதல் - அறிவுறுத்தல்

      தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்ளுமாறு தலைவனைத் தோழி வேண்டுவதே வரைவுகடாதல்.

### இடம்பெற்றுள்ள 2மதிப்பெண் முக்கிய வினாக்கள்

1. தாழை இலையின் தோற்றத்தைக் கூறுக. விடை வ.எண் 1ல் உள்ளது.
2. தாழை அரும்புக்குக் கூறப்பட்ட உவமையைச் சுட்டுக. விடை வ.எண் 2ல் உள்ளது.
3. சேர்ப்பனுக்குத் தோழி அறிவுறுத்திய செய்தி யாது ? விடை வ.எண் 2ல் உள்ளது.
4. வரைவு கடாதல் என்றால் என்ன? விடை வ.எண் 3ல் உள்ளது.

### இடம் பெற்றுள்ள 4 மதிப்பெண் வினா

1. புணர்ந்து நீங்கிய தலைவனைத் தோழி வரைவு கடாய துறை.

6. தலைவன் வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியதை விளக்குக.
   1. தலைவன் என்னைக் களவில் மணந்த போது வேறுஎவரும் இலர்.
   2. 'உன்னைப் பிரியேன். பிரியின் ஆற்றேன். விரைவில் உன்னை மணப்பேன்' என்று தலைவன் தாம் கூறிய சூளுரை பொய்யாகும் படி நடந்தால் நான் என்ன செய்வேன்?
   3. எங்கள் களவு மணம் நடந்த இடத்தில் குருகு ஒன்று இருந்தது. அது சாட்சி கூறும் தகுதியுடையது அன்று.
   4. மேலும் அது ஓடும் நீரில் ஆரல் மீன் வருகிறதா? என்று பார்த்துக்கொண்டிருந்ததால் தலைவன் சூளுரையைக் கேட்டிருக்காது.

இடம் பெற்றுள்ள 2மதிப்பெண் முக்கிய வினாக்கள்

1. தானது பொய்ப்பின்- அது என்பது எதனை? விடை வ.எண் 2ல் உள்ளது
2. தலைவன் தலைவியை மணந்தபொழுது சான்றாய் இருந்தது எது ? அது பயன்படாதவாறு யாங்ஙனம்? விடை வ.எண் 3,4ல் உள்ளவை

இடம் பெற்றுள்ள 4 மதிப்பெண் வினா

1. வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லிய துறை.

7. நற்றாய் காக்கைக்குப் பராய்க்கடன் உரைத்தவாற்றைப் புலப்படுத்துக.
   1. 'குற்றமற்ற சிறகுகளையுடைய சிறிய கரிய காக்கையே! நீ உன் உறவு ஆகிய காகங்களோடு சேர்ந்து உண்ணுமாறு, இறைச்சியோடு கொழுப்பும் கலந்த உணவை பொன்னால் செய்த பாத்திரத்தில் நான் தருவேன்.

2. காளை போன்ற தலைவனுடன், அழகிய கூந்தலுடைய என் மகள் மீண்டும் என்மனைக்கு வருமாறு 'நீ கரைவாயாக' என்றாள்.
3. இவ்வாறு தான் வேண்டியது நிறைவேறுமானால், 'இன்னது படைப்பேன்' எனக் கடவுளையோ, பிறவற்றையோ வேண்டிக்கொள்வது பராய்க்கடன் உரைத்தல்.

### இடம்பெற்றுள்ள 2 மதிப்பெண் முக்கிய வினா

1. நற்றாய் காக்கைக்கு எவ்வாறு பலிக்கடன் கொடுப்பதாகக் கூறினாள் ? விடை வ.எண் 1ல் உள்ளது.

### இடம் பெற்றுள்ள 4 மதிப்பெண் வினா

1. உடன்போகிய தலைமகள் மீண்டுவருதற்பொருட்டுத் தாய், காகத்திற்குப் பராய்க்கடன் உரைத்த துறை.

### 4. தொடர்நிலைச் செய்யுள்

8. அனுமன் செய்ததும், இராமன் உணர்ந்ததும் யாவை?

1.அனுமன் செய்தது : -

1. அனுமன் இராமனைக் கண்டு இராமனின் திருவடிகளை வணங்கவில்லை.
2. சீதையை நினைத்து தன் தலைமேல் கைகளைக் குவித்து சீதை சிறையிருக்கும் தெற்குத் திசையை வணங்கினான் .

2.இராமன் உணர்ந்தது : -

1.சீதை நலமாக உள்ளாள்.

2.அனுமன் சீதையைக் கண்டுள்ளான்.

3.சீதை கற்புடையவளாக உள்ளாள்.

### இடம் பெற்றுள்ள 2 மதிப்பெண் முக்கிய வினாக்கள்

1. அனுமன் இராமனை எய்தியதும் செய்தசெயல் யாது? விடை பத்தி எண் 1ல் உள்ளது.
2. இராமன் குறிப்பால் உணர்ந்தவை யாவை ? விடை பத்தி எண் 2ல் உள்ளவை.

9. பாண்டியன் பரிசாகிய பேழைக்குள் இருந்தன யாவை?

1. போரில் செய்த உதவிக்காகக் கதிர்நாட்டு அரசனின் முன்னோருக்குப் பாண்டிய மன்னன் கொடுத்த பரிசே 'பாண்டியன் பரிசு'.
2. 1. கதிரை நாட்டு உரிமையைக் குறிக்கும் பட்டயம்.
   2. வீரவாள்.
   3. மணிமுடி.
   4. அணிகலன்கள்.

   இவை உள்ள பெட்டியைத்தான் பாண்டியன் பரிசாகக் கொடுத்தான்.

10. பேழையை மீட்டுத்தருமாறு அன்னம் வேலனை எவ்வாறு வேண்டிக் கொண்டாள்?

1. 'பறி கொடுத்த பாண்டியன் பரிசை மீட்டுத் தருவோருக்கு என்னையே தருவேன்', என்று முரசறைந்து தெரிவித்த செய்தியை நீர் அறியவில்லையோ?
2. அதற்கான முயற்சிசெய்யாமல் வீணாக நாட்களைக் கழித்தீரே.
3. பாண்டியன் பரிசாகக் கொடுத்த பெட்டிக்குள் கதிரை நாட்டுரிமையைக் குறிக்கும் பட்டயம் உள்ளது. அது பகைவர் கருத்தை அழிக்கும்.
4. அதைக்கொண்டுவந்தால் உங்களுக்குப் பெரும்புகழ் கிடைக்கும். இந்த நாட்டுக்கே பெரிய நன்கொடை அளித்த பெருமையும் உங்களுக்குக் கிடைக்கும்.

## III பெருவினா 3 x 4 = 12 மதிப்பெண்கள்

### 5. சிற்றிலக்கியங்கள்

1. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை?

1. வில்
   1. இந்திரனை வென்றது.
   2. கடலை வற்றச்செய்தது.
2. வாள்
   1.சோழ மக்கள் வாழ காவிரி ஆறு செல்வதற்கு மலையை வெட்டி வழிவிட்டது.
   2. வானத்தில் அசைந்த அசுரர்களின் நகரங்களை அழித்தது.
3. முரசு
   1. வஞ்சிமாநகரம் திறையாகக் கொடுத்த கடப்பமரத்தால் ஆனது.
   2. சோழனிடம் தோற்ற மன்னர்களின் தலையில் மண்சுமக்கவைத்து காவிரி அணை கட்டுமாறு செய்தது.

4. கொடி

இந்திரனை கொடியில் புலியாகக் கொண்டது.

5. குடை

நாட்டு மக்களைக் காப்பதற்காக வானமும் பூமியும் அடங்க உயர்ந்த அண்டமாகக் காட்சியளித்தது.

2. பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை?
   1. திருமால் வாழ்கின்ற மலை.
   2. சிவபெருமானும், பிரமனும், இந்திரனும், முனிவர்களும், மற்ற தேவர்களும் வந்து காலையும் மாலையும் போற்றும் மலை.
   3. உலகிலுள்ள எல்லாப் பொருள்களாகவும், எல்லா உயிர்களின் தோற்றத்திற்குக் காரணமாகவும், தாய்தந்தையாகவும், ஆதிப் பெருந் தெய்வமாகவும் விளங்கும் பெருமாள் வீற்றிருக்கும் மலை.
3. தலைவி மேகத்திடம் மொழிந்த தூதுமொழிகள் யாவை?
   1. திருமாலைப் போல பொதிய மலையில் உள்ள மேகங்களே!
   2. இளந்திங்களும், இரையைத் தேடுகின்ற குயிலின் குஞ்சும் என் உயிரை வாங்குகின்றன.
   3. மேருமலை எனவும், கயிலாய மலை எனவும் கருதிப் பொதிய மலையில் இருப்பவரும், பார்வதி தேவியின் கணவருமான சொக்கநாதப் பெருமானைச் சங்கத்தமிழ் வளர்க்கும் மதுரை நகருக்குச் சென்று கண்டு செய்தியைக் கூறுங்கள்.
4. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.
   1. தென்கரை நாட்டில் வெயில் காயும்; மக்கள் வயிறு காயா.
   2. தயிர் கலங்கும்; மக்கள் மனம் கலங்கார்.
   3. நாழிகை, வாரம் அழியும்; மக்கள் பசியால் அழிவதில்லை.
   4. வெள்ளம் சுழித்து வரும்; பகைவரின் படைவெள்ளம் மோதிச் சுழலாது.
   5. செந்நெல் குலைகள் தலைசாயும்; மக்கள் நோயுற்று தலைசாய்வதில்லை.
   6. தவம் செய்பவர் தனித்திருப்பர்; கணவன் மனைவி தனித்திரார்.
   7. சந்தனமே தேயும்; பெண்கள் தூது சென்று தேய்வதில்லை.

## 6. மறு மலர்ச்சிப்பாடல்கள்

5. சுவடிச்சாலையில் இருக்கவேண்டிய நூல்கள் யாவை?
   1. பல்கலைக்கழகத்தில் பலதுறைநூல்கள் இருப்பது போலத் தமிழர்களுக்குத் தாய்மொழியில் நூல்கள் வேண்டும்.
   2. பிற மொழிகளில் உள்ள நல்ல நூல்களை நல்ல தமிழில் மொழிபெயர்த்துத் தர வேண்டும்.
   3. அமுதம் போன்ற இனிய கவிதை நூல்கள் இடம் பெறல் வேண்டும்.
   4. அழகிய உரைநடையில் கருத்தமைந்த நூல்கள் இடம் பெறல் வேண்டும்.
   5. இவையெல்லாம் பெருமளவில் இடம் பெறல் வேண்டும்.
   6. அவற்றைத் துறைவாரியாகப் பிரித்து அடுக்கிவைத்தல் வேண்டும்.
6. உவமைக் கவிஞர் சுரதா எவ்வெவற்றைச் சிக்கனம் எனப் பட்டியலிட்டுள்ளார் ?
   1. கவிதை என்பது உரைநடையின் சிக்கனம்.
   2. அடக்கம் என்பது உணர்ச்சிகளின் சிக்கனம்.
   3. பெண்ணின் நாணம் என்பது காதல் வரவேற்பின் சிக்கனம்.
   4. குடிசை என்பது மாளிகையின் சிக்கனம்.
   5. சட்டதிட்டம் என்பது உரிமைகளின் சிக்கனம்.
   6. பங்கீடு என்பது உணவுகளின் சிக்கனம்.
   7. இரண்டே கட்சிகள் இருப்பது அரசியலின் சிக்கனம்.
   8. நீதி நூல்கள் என்பவை அனுபவத்தின் சிக்கனம்.
7. சிக்கனத்தால் வரும் பயன்கள் யாவை?
   1. சிக்கனத்தோடு வாழ்ந்தால் சீரோடும், சிறப்போடும் இருக்கலாம்.
   2. சிக்கனம் நீரூற்றைப்போல் தொடர்ந்து பயன் தரும்.
   3. சிக்கனத்தோடு வாழ்பவருக்கு ஏற்படும் துன்பமெல்லாம் பாறாங்கல் மீது விழும் மழைநீர் போல சிதறிப் போகும்.
   4. ஆதலால் சிக்கனம் தான் ஒருவனுக்குச் சிறந்தசொத்து ஆகும்.

## இடம் பெற்றுள்ள 2மதிப்பெண் முக்கிய வினா

1. துன்பம் எவ்வாறு சிதறிப்போகும் ? விடை வ.எண் 3ல் உள்ளது.

8. சுரதா 'ஓர் உவமைக் கவிஞர்' என்பதைச் சான்று காட்டி விளக்குக.

1. தமிழகத்தில் வாழ்ந்த தந்தை பெரியாருக்கு, அவ்வப்போது அன்பர்கள் அவரது எடைக்கு ஈடாய் ஏதேனும் ஒரு பொருளை நிறுத்து வழங்கினார்கள்.
2. அவ்வாறு மிகுதியாகப் பொருள் கிடைத்த போதும் அதனைத் தம் மனம் போனவாறு அவர் செலவழிக்கவில்லை.
3. மாறாக அன்றாடச் செலவைக் கூட அளவாய்ச் செய்து மிகுதியான பொருளைச் சேர்த்து வைத்து விட்டுச் சென்றுள்ளார். அது இன்று பல்கிப் பெருகி உள்ளது.
4. அதனைக் குறிப்பிட்டு, 'சீராகச் செட்டாக ஒவ்வோர் நாளும் சிக்கனமாய்ப் பெரியார் போல வாழ்ந்து காட்ட வேண்டும்' என்கிறார் உவமைக்கவிஞர் சுரதா.

இதன்மூலம் சுரதா 'ஓர் ஒப்பற்ற உவமைக் கவிஞர்' என உணரலாம்.

## 7. வழிபாட்டுப் பாடல்கள்

9. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும், வேண்டாததும் யாவை?

1. தேன்நிறைந்த பூஞ்சோலைகளையுடைய திருவேங்கடமலையிலுள்ள சுனைகளில் மீனாய்ப் பிறக்க வேண்டும் என்கிறார்.
2. குறையாத செல்வமுடையதும், அரம்பை முதலான தேவலோகப் பெண்கள் சேவை செய்வதுமாகிய வானுலகை ஆளும் இந்திரப் பதவியும், மண்ணுலகை ஆளும் அரசப் பதவியும் வேண்டாம் என்கிறார்.

## IV. நெடுவினா 1x8=8 மதிப்பெண்கள்

**1.** கண்ணகியின் சூளுரையும், நகர்மாந்தர் மயங்கிக் கூறியனவும் யாவை?

1.கண்ணகியின் சூளுரை

1. நீதி நெறியில் நில்லாத அரசனின் ஊரில் வாழும் பத்தினிப்பெண்களே! காணுங்கள். இது என்னுடைய மற்றொரு சிலம்பாகும்.
2. மாலைப்பொழுதில் யாரும் அடையாத துயரத்தையும், துன்பத்தையும் அடைந்தேன். இது வினைப்பயன்.
3. என் கணவன் கள்வன் அல்லன். என் காற்சிலம்புக்கு விலைதராமல் பெறுவதற்காகக் கொன்றனர். இது அநியாயம்.
4. என் கணவனை உங்கள் எதிரே உயிரோடு காண்பேன். இது புதுமை.
5. 'அவன் குற்றமற்றவன்' என்பதை அவன் வாயால் கூறக்கேட்பேன். இது என் சூளுரை.
6. அவ்வாறு கேளாவிடில், 'வருத்தத்தைத் தந்தாள் என என்னை இகழுங்கள். இது உங்களுக்கு வாய்ப்பு' என்றாள்.

2. நகர் மாந்தர் மயங்கிக் கூறியன.

1. யாராலும் நீக்கமுடியாத துன்பத்தை இப்பெண்ணுக்குச் செய்ததால் வளையாத செங்கோல் வளைந்தது.
2. அரசர்க்கரசனும், தண்குடை, வாள் கொண்ட பாண்டியன் அரசியல் அழிந்தது. பாண்டியனின் குளிர்ந்த குடை இன்று வெம்மையைத் தந்தது.
3. சிலம்பு ஒன்றினைக் கையில் எடுத்துக்கொண்டு, நம்மை அழிப்பதற்காகப் புதிய பெரிய தெய்வம் வந்துள்ளது.
4. இவள் தெய்வத்தன்மை உடையவளாய் உள்ளாள். இதனால், என்ன விளையுமோ? என்றனர்.

### இடம்பெற்றுள்ள முக்கிய 4 மதிப்பெண் வினாக்கள்

1. ஈதொன்று - பொருள் விளக்கம் தருக.
   விடை: கண்ணகியின் சூளுரையை அப்படியே எழுதலாம்.
2. கண்ணகியைக் கண்ட ஊரவர் திகைத்துக் கூறியன யாவை?
   விடை: மேலே குறிப்பிட்டுள்ள நகர் மாந்தர் கூறியனவற்றை எழுதுக.

**2.** மருண் மாலைப்போதில் கண்ணகி இனைந்து ஏங்கி உரைத்தனவும், கோவலனைக் கண்டபொழுது நிகழ்ந்த அற்புதத்தையும் எழுதுக.

1.மருண்மாலைப்போதில் கண்ணகி இனைந்து ஏங்கி உரைத்தன.

1. இம்மதுரையில் கற்புடைய மகளிரும் உள்ளாரோ? தம் கணவரின் மிகுதியான குறைகளைப் பொறுத்துக்கொள்கின்ற கற்புடைய மகளிரும் உள்ளாரோ?.
2. இம்மதுரையில் சான்றோர்களும் உள்ளாரோ? பிறர்பெற்ற குழந்தையினைத் தாங்கி வளர்க்கின்ற சான்றோர்களும் உள்ளாரோ?.
3. இம்மதுரையில் தெய்வம் உள்ளதோ? என் கணவனைக் கொன்றதால், செங்கோல் வளைந்த பாண்டிய மன்னனுடைய மதுரை நகரில் தெய்வமும் உள்ளதோ?.

2. கோவலனைக் கண்ட பொழுது நிகழ்ந்த அற்புதம்.,

1. இறந்த கணவனைக் கண்ட கண்ணகி, அவன் மார்பினைத் தன்மார்போடு தழுவிக்கொண்டாள்.
2. அவ்வாறு தழுவியதும் இறந்த கோவலன் எழுந்து நின்றான்.

3. கோவலன் கண்ணகியை நோக்கி 'முழுமதிபோல ஒளிபெற்ற உன்முகம் வாடிவிட்டதே' என்று தன் வாயால் கூறினான்.
4. கண்ணகியின் கண்ணீரைத் தன் கையால் துடைத்தான்.
5. கண்ணகி கோவலனின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள்.
6. கோவலன் இவ்வுலகை விட்டு தேவர் உலகிற்குச் சென்றான்.

## இடம்பெற்றுள்ள 4 மதிப்பெண் முக்கிய வினாக்கள்

1. 'உண்டுகொல்' என்னும் முறையில் கண்ணகி சினந்து கூறியன யாவை? விடை : பத்தி எண் 1ல் உள்ளவை.
2. கோவலனைக் கண்டபொழுது நிகழ்ந்த அற்புதம் யாது? விடை : பத்தி எண் 2ல் உள்ளவை.

**3.** சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகளை எழுதுக.

1. 'உலக நாயகனே! தென்திசையிலுள்ள இலங்கை நகரில் கற்பினுக்கு அணிகலனாய் விளங்கும் சீதையை என் கண்களால் கண்டேன்.
2. என் பெருந்தெய்வமே! சீதையானவள் உன் மனைவி என்னும் உரிமைக்கும் , உன் தந்தை தசரத மன்னனின் மருமகள் என்ற தகுதிக்கும், மிதிலை மன்னரான சனகனின் மகள் என்னும் பெருமைக்கும் எக்குறையுமில்லாமல் இருக்கிறாள்.
3. வில்லேந்திய வீரனே! இலங்கை நகரில் நற்பெருந்தவத்தவளாகிய சீதையைக் காணவில்லை. உயர்குடிப்பிறப்பு, பொறுமை, கற்பு ஆகியன களிநடனம் புரிவதைக் கண்டேன்.
4. தலைவனே! இலங்கை நகரில் கற்பகச்சோலை ஒன்று உள்ளது. அச்சோலையில் அன்று உன்தம்பி இலக்குவன் காட்டுப்புற்களால் வேய்ந்த தூயபர்ணச்சாலையில், தவம்செய்த தவத்தின் பயனாய்ப் பிறந்த சீதை இருந்தாள்.
5. நான் இலங்கை முழுவதும் தேடி இராவணனது இருப்பிடத்தைக் கண்டேன். அங்குள்ள பெண்களையெல்லாம் பொதுவாகப் பார்த்துக்கொண்டே சென்றேன். அங்குள்ள அசோகவனத்தில் நுழைந்தேன். அங்கு சீதையைக் கண்ணீர்க்கடலில் கண்டேன்' என்றான்.

## இடம் பெற்றுள்ள 2 மதிப்பெண் முக்கிய வினா.

1. 'கண்டனென்' என்று அனுமன் கூறியவை யாவை? விடை : வ.எண் 1 இல் உள்ளது.

## இடம் பெற்றுள்ள 4 மதிப்பெண் முக்கிய வினா.

1. என் பெருந்தெய்வம் என்று அனுமன் உரைத்தன யாவை? விடை - வ. எண் 2இல் உள்ளது.
2. களிநடம்புரியக் கண்டேன் என்று அனுமன் உரைத்தவற்றை எழுதுக. விடை : வ.எண் 3இல் உள்ளது.
3. 'தவம் செய்த தவமாம் தையல்' இலங்கையில் இருந்த நிலையை அனுமன் எவ்வாறு கூறினான்? விடை : வ.எண் 4 இல் உள்ளது.

**4.** இராவணன் வருகையும் அதன் பின் நிகழ்ந்தனவுமாகிய செயல்களை அனுமன் உரைத்த பாங்கினை எழுதுக.

1. தலைவனே! சீதையை வணங்குவதற்காகத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு இருந்தேன். அப்போது இராவணன் அங்கு வந்து தன்னை விரும்புமாறு சீதையைக் கனிவாக வேண்டினான். ஆனால் சீதை இராவணனை வெறுத்து கடுஞ்சொற்களைக் கூறினாள்.
2. கோபமடைந்த இராவணன் சீதையைக் கொல்ல முயன்றான். பின் அரக்கியரை நோக்கி சீதைக்கு அறிவுரை கூறுங்கள் என்று கூறி விட்டுச்சென்றான். நான் எனது மந்திர சக்தியால் அரக்கியர்களை உறங்கச்செய்தேன்.
3. மனம் தளர்ந்த சீதை, காட்டுக்கொடியை எடுத்து மரக்கிளையில் கட்டி மறுமுனையைத் தன் கழுத்தில் கட்டி சுருக்கிட முயன்றாள். அதைத் தடுக்கக் கருதி அவர் திருவடிகளை வணங்கி இராமநாமத்தைக் கூறினேன். நீ தந்த கணையாழியைக் காட்டினேன். அவள் உயிர்பெற்றது போல் ஆனாள்.
4. மோதிரத்தைப் பார்த்து வஞ்சகன் ஊருக்கு வந்ததால் தூய்மை இழந்தது என வருந்தி கண்ணீரால் தூய்மைப் படுத்தினாள். ஆனால் எதுவும் பேசவில்லை. இளைத்த மேனி பூரிக்க வியப்புற்றாள். கண்களை மூடவில்லை. பெருமூச்சு விட்டாள்.
5. இன்னும் ஒருமாதம் மட்டுமே உயிரோடிருப்பேன். இராமன் வராவிட்டால் உயிர்விடுவேன் என்றாள். 'சீதையே! நீ இருந்த இடம் தெரியாததால் தேடிக்கண்டுபிடித்து வர இவ்வளவு நாள் ஆனது' என்றேன். சீதையைப் பிரிந்து இராமனே நீ பட்ட வேதனையை விளக்கினேன்.
6. இராமனே! நீ இருக்கும் திசைநோக்கி சீதை வணங்கினாள். பின்னர், தன் ஆடையில் வைத்திருந்த சூடாமணியை எடுத்து அடையாளப்பொருளாக என்னிடம் தந்து அனுப்பினாள் என்றான் அனுமன்.

## இடம் பெற்றுள்ள 2 மதிப்பெண் முக்கிய வினா.

1. 'உயிர்தந்து ஈயும் மருந்தொத்தது' என்று அனுமன் குறிப்பிட்டதன் பொருள் யாது? விடை - வ.எண் 3 இல் உள்ளது.

### இடம் பெற்றுள்ள 4 மதிப்பெண் முக்கிய வினாக்கள்

1. இலங்கையர்கோன் வந்ததும் ஆங்கு நிகழ்ந்தனவும் யாவை? விடை- வ.எண் 1, 2 இல் உள்ளவை.
2. மனம் தளர்ந்த சீதை செய்யத்துணிந்த செயலும், அதனைக்கண்ட அனுமன் செய்கையும் யாவை? விடை- வ.எண் 3இல் உள்ளது.
3. கணையாழி கண்ட சீதையின் செயல்கள் யவை? விடை வ.எண் 4இல் உள்ளது.
4. அனுமன் சீதைக்குச் சொல்லிய செய்திகள் யாவை? விடை- வ.எண் 5இல் உள்ளது.
5. சீதை இராமனுக்குச் சொல்லியனுப்பிய செய்தியும், அடையாளமும் பற்றி எழுதுக. விடை- வ.எண் 5,6 இல் உள்ளவை.

**5.** கோலியாத்து என்ற அரக்கனின் வருகையும், தாவீதன் அவனை வென்ற திறத்தினையும் விவரி.

1. கோலியாத்து என்ற அரக்கன் கண்டவர் அஞ்சும் உருவத்துடன், கைகளில் ஈட்டியும், கேடயமும் தாங்கி கண்களில் தீப்பொறிப்பறக்க வந்தான். இஸ்ராயேலரை நோக்கி, " உங்களுள் ஒருவன் என்னோடு போர் புரிய வருக! அவனும் நானும் தனிப்போர் செய்வோம். தோற்றவர் வென்றவருக்கு அடிமை ஆவார். என் அறைகூவலை ஏற்று வருவோர் வருக" என இகழ்ந்து பேசினான்.
2. கோலியாத்தின் அறைகூவலைக் கேட்ட சவுல் மன்னன், தன் துன்பத்தைப்போக்கும் துணிவுள்ள வீரர் எவரும் இல்லாததைக் கண்டு மனம் தளர்ந்தான். பின் தன் வீரர்களுக்கு உற்சாகமூட்ட "இக்கோலியாத்து என்ற அரக்கனைவென்றால் நான் என் மகளை அவனுக்குத் திருமணம் செய்து தருவேன்" என அறிக்கை விடுத்தான்.
3. கோலியாத்தோடு போரிடப் புறப்பட்டான் தாவீது. சவுல் மன்னன் கொடுத்த வேல் முதலிய போர்க்கருவிகளைப் பயன்படுத்தத் தெரியாது எனக்கூறி வாங்க மறுத்தான். பின்னர் ஒரு கவணும், ஐந்து கற்களும் எடுத்துக்கொண்டு போரிடப் புறப்பட்டான்.
4. குருமாரும், நகரமக்களும் கூறிய வாழ்த்தொலி கேட்டு வந்தான். கோலியாத்து கடுஞ்சினம் கொண்டான். தாவீதைப் பார்த்து "அடச் சிறுவனே! நீயா என்னை எதிர்த்துப்போர் புரிய வந்துள்ளாய்? மதயானையை எதிர்த்து நாய் போரிட முடியுமா? நான் சினங்கொண்டு பெருமூச்சு விட்டாலே நீ தூசுபோல சுழன்று இந்த உலகத்துக்கு அப்பால் சென்று விழுவாய்" என்று சினந்து கூறினான்.
5. கோலியாத்தின் கோபமொழி கேட்ட தாவீது, "அடா கொடியவனே! உன் வலிமை உன் கையிலுள்ள வேலால் பெற்ற வலிமை. ஆனால் நானோ கடவுளின் வலிமையுடன் உன்னைக்கொன்று பறவைகளுக்கு உணவாக்குவேன்" என்றான்.
6. தாவீதன் கல்லைக் கவணில் வைத்ததையும், கவணைச் சுழற்றியதையும், கல்லை விரைவில் செலுத்தியதையும் எவரும் காணவில்லை. அக்கல் கோலியாத்தின் நெற்றியில் பாய்ந்ததையும், மேகங்கள் இடியுடன் பூமியில் விழுவதைப்போல கோலியாத்து விழுந்ததையுமே அனைவரும் கண்டனர். அவன் தலையைத் தாவீதன் தன் கைவாளால் வெட்டி எறிந்தான். இவ்வாறு தாவீதன் கோலியாத்தை வென்றான்.

### இடம் பெற்றுள்ள 4 மதிப்பெண் முக்கிய வினாக்கள்.

1. கோலியாத்து மொழிந்த இகழ்ச்சி மொழிகள் யாவை?
   விடை- வ.எண் 1இல் உள்ளது.
2. சவுல் மன்னன் அறிக்கை யாது?
   விடை - வ.எண் 2இல் உள்ளது.
3. இளந்தாவீதன் எடுத்துச் சென்ற ஆயுதம் யாது?
   விடை - வ.எண் 3 இல் உள்ளது.
4. கோலியாத்து தாவீதனைக் கண்டு வெகுண்டு உரைத்தவை யாவை?
   விடை - வ.எண் 4 இல் உள்ளது.
5. தாவீதன் கோலியாத்துக்கு உரைத்த மறுமொழி யாது?
   விடை - வ.எண் 5 இல் உள்ளது.
6. தாவீதன் கோலியாத்தினை வென்றமை யாங்ஙனம் ?
   விடை - வ.எண் 6 இல் உள்ளது.

**6.** 'மறப்பரிது நும் நன்றி' என்று கூறிய அன்னத்திடம் வேலன் கூறிய எழுச்சியுரைகளை எழுதுக

1. ‘உம்முடைய உதவியை மறக்க முடியாது’ எனக்கூறிய அன்னத்திடம் வேலன் பின்வரும் எழுச்சியுரைகளைக் கூறினான்.
2. உயிர்பிரிந்தால் சிறிதளவும் பயன்படாதது இந்த உடம்பு. வாழ்நாளோ 'நாளை உண்டோ இல்லையோ' என்னும் ஐயத்திற்குரியது. உயிர் பிரிந்தபின் கழுகு முதலியவற்றால் தின்னப்படுவது இந்த உடம்பு.
3. இளமையோ நீர்க்குமிழி போன்றது. இந்த உடம்பை நான் அரியசெயல் செய்யவே பயன்படுத்துதல் வேண்டும்.
4. இந்த உடம்பு மன்னரின் மகளுக்கு ஆட்சியை மீட்டுத்தரவே பயன்படவேண்டும்.
5. அவ்வாறு பயன்படவில்லையெனில் அறிவுடையோரால் இகழப்படுவேன்.

6. என்னைப் பெற்ற தாய், தந்தைக்கும் சான்றோர்களைப் பெற்ற தமிழ்நாட்டிற்கும் என்னால் தினைஅளவு பயன் கிடைக்குமென்றால் அதற்காகச் சாகின்ற நாள் எனக்கு மகிழ்ச்சியான நாளே.

7. பனைஅளவு பெரிய நன்மை தந்தாலும், தன் நலம் ஒன்றையே நினைப்பவன் மனிதர்களுள் பதர் ஆவான்.

8. உன்னை ஒன்று வேண்டுகிறேன். என்னால் முடியுமென்றால் அதற்கு என் உயிரைத் தருகின்றேன்.

7. குழந்தைத் தொழிலாளர் அவல நிலையைக் கவிஞர் அப்துல் ரகுமான் கூறுமாறு தொகுத்து எழுதுக.

1. உண்ணும் சோற்றுக்கே அலைவதால், தட்டாம்பூச்சிகளைப் பிடிக்க சிறுவர்களுக்கு நேரமில்லை.
2. கண்ணீர் வெள்ளத்திலிருந்து கரையேறத்துடிக்கும் சிறுவர்களுக்கு மழைநீரில் காகிதக் கப்பல் விட ஓய்வில்லை.
3. வாழ்க்கையே இவர்களோடு கண்ணாமூச்சி ஆடுவதால் குழந்தைத் தொழிலாளர்கள் தம் தோழர்களோடு கண்ணாமூச்சி விளையாட நேரமில்லை.
4. பசிக்கயிற்றால் பம்பரமாய்ச் சுழன்று வேலைசெய்வதால் பம்பரம் சுற்றி விளையாட நேரமில்லை.
5. குழந்தைகளிடமிருந்து விளையாட்டுகளைப் பறித்தது யார்? இந்தச் சிறுவர்களின் தலையில் வாழ்க்கைப் பாரத்தை ஏற்றியது யார்?
6. பலப்பம் பிடிக்க வேண்டிய கைகள் தீக்குச்சிகள் அடுக்கலாமா? அறிவென்னும் வெளிச்சம் பெறவேண்டிய இவர்கள் யாரோ தீக்குச்சியின் மூலம் வெளிச்சம் பெறுவதற்காக இவர்களே தீக்குச்சிகளாகி விட்டார்கள்.
7. எதிர்கால ஒளிவிளக்குகளின் நிகழ்காலம் கருகிப்போனதைக் காணுங்கள்.
8. வருடந்தோறும் 'குழந்தைகள் தினம்' கொண்டாடுகிறவர்களே! நீங்கள் என்று இக்குழந்தைகளை மதித்துக்கொண்டாடப்போகிறீர்கள்?.

## இடம் பெற்றுள்ள 2 மதிப்பெண் முக்கிய வினாக்கள்

1. சிறுவர்களுக்குத் தட்டாம் பூச்சிப் பிடிக்க நேரமில்லாதது ஏன்?
   விடை- வ.எண் 1 இல் உள்ளது.
2. சிறுவர்களுக்குக் காகிதக்கப்பல் விட ஓய்வில்லாதது ஏன்?
   விடை- வ.எண் 2 இல் உள்ளது.
3. குழந்தைத்தொழிலாளர்கள் ஏன் கண்ணாமூச்சி ஆட இயலவில்லை?
   விடை- வ.எண் 3 இல் உள்ளது.
4. குழந்தைத் தொழிலாளர்கள் ஏன் பம்பரம் விளையாட முடியவில்லை?
   விடை- வ.எண் 4 இல் உள்ளது.

### V. வினாக்களுக்கு விடையளி

1. "வெஞ்சின விறல்வேற் காளையொடஞ்சி லோதியை வரக்கரைந்தீமே"
   1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது? ஐங்குறுநூறு.
   2. அஞ்சிலோதி என்ற சொல் யாரைக்குறிக்கிறது? தலைவியை.
   3. யார் யாரிடம் கூறிய கூற்று? நற்றாய் காக்கையிடம்.
   4. இச்செய்யுளின் ஆசிரியர்யார் ? ஓதலாந்தையார்.

2. “அலங்குதண் சோலை புக்கேன், அவ்வழி அணங்கன் னாளைக்
   கலங்குதெண் டிரையிற் றாய கண்ணினீர்க் கடலில்கண்டேன்"
   1. யார் யாரிடம் கூறிய கூற்று? அனுமன் இராமனிடம்.
   2. இக்கூற்று அமைந்த நூல் எது? கம்பராமாயணம்.
   3. அணங்கன்னாள் யார்? சீதை
   4. சோலை புக்கேன் என்று கூறியவன்? அனுமன்.

3. “நெடுந்தேர் ஊர்மதி வலவ
   முடிந்தன்று அம்மநாம் முன்னிய வினையே"
   1. யார் யாரிடம் கூறியது? தலைவன் தேர்ப்பாகனிடம்.
   2. 'வலவ' என்று குறிக்கப்படுபவன் யார்? தேர்ப்பாகன்.
   3. இச்செய்யுளைப் பாடியவர் யார்? மதுரை மள்ளனார்.
   4. முடிந்தன்று என்று கூறப்பட்டுள்ளது எது? எண்ணி வந்த செயல் முடிந்ததை.

4. "மாதர்த் தகைய மடவார்கண் முன்னரே
   காதற் கணவனைக் கண்பனே ஈதொன்று"
   1. பாடலடிகள் இடம்பெற்ற நூல் எது? சிலப்பதிகாரம்.
   2. இப்பாடலடிகள் யார் கூற்று? கண்ணகி.
   3. 'காதற்கணவன்' என குறிப்பிடப்பட்டவன்? கோவலன்.
   4. ஈதொன்று என்பதன் பொருள்? இது ஒரு புதுமை.

5. " நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்"

1. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது? புறநானூறு.
2. இப்பாடலின் ஆசிரியர் யார்? நரிவெரூஉத் தலையார்.
3. ஆற்றீராயினும் எது? நல்லது செய்தல்.
4. 'ஓம்புமின்' எது? அல்லது செய்தல்.

6. "இற்பிறப்பென்பதொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்"

1, இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது? கம்பராமாயணம்.
2. களிநடம் புரியக்கண்டேன் என்று கூறியவர்? அனுமன்.
3. இக்கூற்று யாரிடம் கூறப்பட்டது? இராமனிடம்.
4. இத்தொடரின் பொருள்யாது?
நற்குடிப்பிறப்பு, பொறுமை, கற்பு ஆகியவை மகிழ்ச்சியால் நடனமாடுவதைக் கண்டேன்.

7. "திங்களொன் றிருப்பன் இன்னே திருவுளம் தீர்ந்த பின்னை
மங்குவென் உயிரோ டென்றுன் மலரடி சென்னி வைத்தாள்".

1.இதனைக் கூறியவர் யார்? அனுமன்.
2. யாரிடம் கூறினார்? இராமனிடம்.
3. பாடலடிகள் உள்ள நூல்எது? கம்பராமாயணம்.
4. மலரடி சென்னி வைத்தாள் யார்? சீதை.

8. "யாருமில்லை தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ"

1. யார் யாரிடம் கூறிய கூற்று? தலைவி தோழியிடம்.
2. கள்வன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்? தலைவன்.
3. இப்பாடலைக் பாடியவர் யார்? கபிலர்.
4. இப்பாடலடி இடம்பெற்ற நூல்? குறுந்தொகை.

9. "தன்மணிக் கழுத்திற் சார்த்தும் அளவையில் தடுத்து நாயேன்
பொன்னடி வணங்கி நின்று நின்பெயர் புகன்ற போழ்தின்".

1. இக்கூற்றைக் கூறியவர் யார்? அனுமன்.
2. யார் யாரிடம் கூறினார்? இராமனிடம்.
3. பாடலடிகள் இடம்பெற்ற நூல்? கம்பராமாயணம்.
4. நின் பெயர் எனக் குறிப்பிடப்படும் பெயர்? இராமன்.

10. "வண்டுறை ஓதியும் வலியல் மற்றிவன்
கண்டதும் உண்டு அவள் கற்பும் நன்று"

1. வண்டுரை ஓதியும் வலியள் யார்? சீதை.
2. மற்றிவன் யாரைக் குறிக்கிறது? அனுமன்.
3. பாடலடிகள் இடம்பெற்ற நூல்? கம்பராமாயணம்.
4. யார் எவ்வாறு உணர்ந்தார்? இராமன் 'குறிப்பினால்' உணர்ந்தார்.

11. "வெறுங்கை என்பது மூடத்தனம் - உன்
விரல்கள் பத்தும் மூலதனம்"

1. இப்பாடலடிகளைப் பாடியவர் யார்? தாராபாரதி.
2. எதுமூடத்தனம்? கையில் எதுவும் இல்லை என்பது.
3. எவை மூலதனம்? கைகளில் உள்ள 10 விரல்கள்.
4. இப்பாடல் உள்ள நூல் எது? இது எங்கள் கிழக்கு.

12. "கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறலொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ"

1.இப்பாடல் இடம்பெற்ற நூல் எது? புறநானூறு.
2. இச்செய்யுளைப் பாடியவர் யார்? நரிவெரூத்தலையார்.
3. இது யாரைப்பற்றிக்கூறுகிறது? பயனற்ற முதுமையுடையோரை நோக்கி.
4. கணிச்சி பொருள் எழுதுக. மழு ஆயுதம்.

13. “கடமை புரிந் தான் இவனே"
    1. யார் யாரிடம் கூறிய கூற்று? ஆத்தாக் கிழவி அன்னத்திடம்.
    2. பாடலடிகள் உள்ள நூல் எது? பாண்டியன் பரிசு.
    3. பாடலை எழுதிய ஆசிரியர்? பாரதிதாசன்.
    4. எப்போது கூறினார்? வேலன் செய்த உதவிகளை அன்னம் கூறும் போது.

14. “எதிர்த்த அவ்வரக்கனை வென்றால்
    ஆங்கு நானவற்கு என் மகள் அளிக்குவன்"
    1. பாடல் இடம் பெற்ற நூல் எது? தேம்பாவணி.
    2. அரக்கனின் பெயர் என்ன? கோலியாத்து.
    3. நூலின் ஆசிரியர் யார்? வீரமாமுனிவர்.
    4. நான் என்பது யாரைக்குறித்தது? சவுல் மன்னன்.

15. “பெரும்பெருமா ளெவ்வேந்து முன்போதப்பின்பு
    வரும் பெருமாள் வந்தனன் பாரீர்”.
    1. இப்பாடலின் ஆசிரியர் யார்? ஒட்டக்கூத்தர்.
    2. இப்பாடல் இடம்பெற்ற நூல்? இராசராசசோழன் உலா.
    3. பாரீர் - என்று கூறியவர் யார்? உலாக் காண வந்த பெண்கள்.
    4. முன்போகப் பின்வருவோன் யார்? இராசராசசோழன்.

16. “மண்குளிரச் செய்யும் மறவேல், நெடுந்தகை
    தண்குடை வெம்மை விளைத்தது”.
    1. பாடலடிகள் இடம் பெற்ற நூல் எது? சிலப்பதிகாரம்.
    2. இதனை இயற்றிய ஆசிரியர்? இளங்கோவடிகள்.
    3. இதனைக் கூறியவர் யார்? மதுரை நகர மக்கள்.
    4. தண்குடை யாருடையது? பாண்டிய மன்னனுடையது.

17 “அண்டர் நாயக இனித்துறத்தி
    ஐயமும் பண்டுள துயரும்”
    1. இதனைக் கூறியவர் யார்? அனுமன்.
    2. அண்டர்நாயகன் யார்? இராமன்.
    3. இவ்வடி இடம்பெற்ற நூல்? கம்பராமாயணம்.
    4. பண்டுள துயரமும் ஐயமும் யாவை?
    துயரம் - பிரிவுத் துன்பம்.
    ஐயம் - சீதையைப் பற்றியது.

18. “செம்பொற் சிலம்பொன்று கைஏந்தி
    நம்பொருட்டால் வம்பப் பெருந்தெய்வம் வந்தது”
    1. இவ்வடிகள் யார் கூற்று? மதுரை நகரமக்கள்.
    2. 'வம்பப் பெருந்தெய்வம் ' யார்? கண்ணகி.
    3. வந்தது எங்கு? மதுரை நகர வீதியில்.
    4. பாடலை இயற்றிய ஆசிரியர் ? இளங்கோவடிகள்.

19. "வல்கையோடுனை மாய்த்துடல் புட்கிரையாக
    ஒல்செய்வேனெனா வுடைகவண் சுழற்றினன் இளையோன்”.
    1. இளையோன் யார்? தாவீது.
    2. உனை மாய்த்து - யாரை மாய்த்து? கோலியாத்தை மாய்த்து.
    3. யாருடைய வல்கையோடு? கடவுளுடைய.
    4. இவ்வடிகள் இடம்பெற்ற நூல்? தேம்பாவணி.

20. ”குருகு முண்டுதான் மணந்த ஞான்றே"
    1. யார் யாரிடம் கூறியது? தலைவி தோழியிடம்.
    2. இச்செய்யுள் இடம்பெற்றுள்ள நூல்? குறுந்தொகை.
    3. இச்செய்யுளை இயற்றியவர்? கபிலர்.
    4. குருகு என்பதன் பொருள்?. நாரை.

21. "வாய்த்தீரே மானத்தை உயிரைக் காக்க
மறப்பரிது நும்நன்றி என்றாள்".
1. இதனைக் கூறியவர் யார்? அன்னம்.
2. இதனை யாரிடம் கூறினார்? வேலனிடம்.
3. இப்பாடலை எழுதிய ஆசிரியர்? பாரதிதாசன்.
4. பாடலடிகள் உள்ள நூல்? பாண்டியன் பரிசு.

22. "கல்லையேற்றலும்கவணினைச் சுழற்றலும் மக்கல்
ஒல்லையோட்டலு மொருவரும் காண்கிலர்"
1. இப்பாடலடிகள் உள்ள நூல்? தேம்பாவணி.
2. பாடலின் ஆசிரியர் யார்? வீரமாமுனிவர்.
3. கவணினைச் சுழற்றியவர் யார்? தாவீது.
4. யார்யாரிடையே இப்போர் நடந்தது? கோலியாத்துக்கும் தாவீதுக்கும் இடையில்.

23. "புல்லார் புரவி வல்விரைந்து பூட்டி
நெடுந்தேர் ஊர்மதி வலவ."
1. இப்பாடலடிகள் இடம்பெற்ற நூல்? அகநானூறு.
2. இது யார்யாரிடம் கூறிய கூற்று? தலைவன் தேர்ப்பாகனிடம்.
3. புரவி என்பதன் பொருள் யாது? குதிரை.
4. வல்விரைந்து இலக்கணக் குறிப்பு யாது? ஒரு பொருட்பன்மொழி.

24. "வாங்கிய ஆழி தன்னை வஞ்சர் ஊர் வந்த தாமென்
றாங்குயர் மழைக்கண்ணீரால் ஆயிரம் கலசம் ஆட்டி.
1. பாடல் இடம்பெற்ற நூல்? கம்பராமாயணம்.
2. இப்பாடலின் ஆசிரியர்? கம்பர்
3. 'ஆழி' என்பதன் பொருள் யாது? கணையாழி.
4. வஞ்சர் ஊர் எது? இலங்கை

## VI. மனப்பாடப்பகுதி 1. 4 + 2= 6 மதிப்பெண்கள்

| வ. எண் | செய்யுள் | தொடக்கம் | பாவகை |
|---|---|---|---|
| 1. | இறைவாழ்த்து | ஒன்றேயென்னின் | அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |
| 2. | மொழிவாழ்த்து | நண்ணுமிளமை | நாட்டுப்புறச் சிந்து |
| 3. | நாட்டு வாழ்த்து | இந்திய நாடிது | எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |
| 4. | புறநானூறு | பல்சான்றீரே | நேரிசை ஆசிரியப்பா |
| 5. | கம்பராமாயணம் | கண்டனென் | கலிவிருத்தம் |
| 6. | கம்பராமாயணம் | விற்பெருந்தடந்தோள்வீர | அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |
| 7. | தேம்பாவணி | வெல்வை | கலித்துறை |
| 8. | மதுரைக் கலம்பகம் | ஏமவெற்பு | எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |
| 9. | புத்தக சாலை | மனிதரெலாம் | எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |
| 10. | சிக்கனம். | உரைநடையின் | எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் |

### 2. 2 + 2 =4 மதிப்பெண்கள்

1. தொடங்கும் குறள்கள் பயில்க.
காலத்தினால் ... தினைத்துணை... உதவி... மறவற்க... எழுமை... நன்றி... கொன்றன்ன... எந்நன்றி... சென்ற... எப்பொருள்... எவ்வது... அஞ்சுவது...

2. முடியும் குறள்கள் பயில்க.
அரிது, வரைத்து, கெடும், இலர், அரண், தொழில், நோய், மகற்கு.

## VII .1. உறுப்பிலக்கணம் .2 + 2 =4 மதிப்பெண்கள்

(முக்கிய குறிப்பு : அடிக்கோடிட்ட சொற்கள் நன்குதெரிந்தால் மட்டும் எழுதினால் நல்லது)

1. ஓம்புமின் = ஓம்பு + மின்
1. ஓம்பு -பகுதி
2. மின் - ஏவல் பன்மை வினைமுற்று விகுதி

2. உணர்மின் = உணர் + மின்
    1. உணர் -பகுதி
    2. மின் - ஏவல் பன்மை வினைமுற்று விகுதி
3. காணீர் = காண் + ஈர்
    1. காண் - பகுதி
    2. ஈர் - ஏவல் பன்மை வினைமுற்று விகுதி.
4. செய்தல் = செய் + தல்
    1.செய் - பகுதி
    2. தல் - தொழிற்பெயர் விகுதி
5. அறைதல் = அறை + தல்
    1. அறை - பகுதி
    2. தல் - தொழிற்பெயர் விகுதி
6. அசைத்த = அசை + த் + த் + அ
    1.அசை - பகுதி
    2. த் - சந்தி
    3. த் - இறந்தகால இடைநிலை
    4. அ - பெயரெச்ச விகுதி
7. இழந்த = இழ+ த்(ந்)+ த்+ அ
    1. இழ - பகுதி
    2. த் - சந்தி
    3. ந் - விகாரம்
    4. த் - இறந்தகால இடைநிலை
    5. அ - பெயரெச்ச விகுதி
8. திறந்து = திற + த்(ந்) + த் + உ
    1. திற - பகுதி
    2. த் - சந்தி
    3. ந் - விகாரம்
    4. த் - இறந்தகால இடைநிலை
    5. உ - வினையெச்ச விகுதி
9. குனிந்து = குனி + த்(ந்) + த் + உ
    1. குனி - பகுதி
    2. த் - சந்தி
    3. ந் - விகாரம்
    4. த் - இறந்தகால இடைநிலை
    5. உ - வினையெச்ச விகுதி
10. செய்க= செய் + க
    1.செய் - பகுதி
    2. க - வியங்கோள் வினைமுற்று விகுதி
11. வாழிய = வாழ் + இய
    1.வாழ் - பகுதி
    2. இய - வியங்கோள்வினைமுற்று விகுதி
12. எய்தி = எய்து + இ
    1.எய்து - பகுதி
    2. இ - வினையெச்ச விகுதி
13. தோன்றி = தோன்று + இ
    1.தோன்று - பகுதி
    2. இ - வினையெச்ச விகுதி
14. ஈன்ற = ஈன் + ற் + அ
    1. ஈன் - பகுதி
    2. ற் - இறந்தகால இடைநிலை
    3. அ - பெயரெச்ச விகுதி

15 ஏகுவாய் = ஏகு + வ் + ஆய்

1. ஏகு - பகுதி
2. வ் - எதிர்கால இடைநிலை
3. ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

16. அறைந்தாய் = அறை + த்(ந்) + த் +ஆய்

1. அறை - பகுதி
2. த் - சந்தி
3. ந் - விகாரம்
4. த் - இறந்தகால இடைநிலை
5. ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

17. ஆடுகின்ற = ஆடு + கின்று+ அ

1. ஆடு - பகுதி
2. கின்று - நிகழ்கால இடைநிலை
3. அ - பெயரெச்ச விகுதி

18. கொள்வர் = கொள் + வ் + அர்

1. கொள் - பகுதி
2. வ் - எதிர்கால இடைநிலை
3. அர் - படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதி

19. விடுவர் = விடு + வ் +அர்

1. விடு - பகுதி
2. வ் - எதிர்கால இடைநிலை
3. அர் - படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதி

20. கேட்டாள் = கேள் (ட்) + ட் + ஆள்

1. கேள் - பகுதி
2. ட் - விகாரம்
3. ட் - இடைநிலை
4. ஆள் - படர்க்கை பெண்பால் வினைமுற்று விகுதி

21. கொன்றார் = கொல் (ன்) + ற் +ஆர்

1. கொல் - பகுதி
2. ன் - விகாரம்
3. ற் - இறந்தகால இடைநிலை
4. ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

22. வாழ்த்துவம் = வாழ்த்து + வ் + அம்

1. வாழ்த்து - பகுதி
2. வ் - எதிர்கால இடைநிலை
3. அம் - விகுதி

23. புனைந்தோம் = புனை + த்(ந்) + த் +ஓம்

1. புனை - பகுதி
2. த் - சந்தி
3. ந் - விகாரம்
4. த் - இறந்தகால இடைநிலை
5. ஓம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

24. அறிந்தனை =அறி + த்(ந்) + த் + அன் + ஐ

1. அறி - பகுதி
2. த் - சந்தி
3. ந் - விகாரம்
4. த் - இறந்தகால இடைநிலை
5. அன் - சாரியை
6. ஐ - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

25. நடந்தன = நட+ த்(ந்) + த் + அன் + அ
   1. நட - பகுதி
   2. த் - சந்தி
   3. ந் - விகாரம்
   4. த் - இறந்தகால இடைநிலை
   5. அன் - சாரியை
   6. அ - பெயரெச்ச விகுதி

26. வந்தனன் = வா (வ) + த்(ந்) + த் + அன் + அன்
   1. வா - பகுதி
   2. வ - விகாரம்
   3. த் - சந்தி
   4. ந் - விகாரம்
   5. த் - இறந்தகால இடைநிலை
   6. அன்- சாரியை
   7. அன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

## VII. 2. இலக்கணக் குறிப்பு 3 x 2 =6 மதிப்பெண்கள்

1. அடுக்குத்தொடர்
   வாழிய வாழிய, புடைபுடை, தினந்தினம், விக்கி விக்கி, அறைந்தறைந்து, சுமைசுமை, யார்யார், இனிதுஇனிது.
2. உரிச்சொல் தொடர்
   மாஞாலம், மாமலை, வைவேல், மாமணி, மாவலி, கடிமகள், வைவாள்.
3. எண்ணும்மை
   வையகமும் வானகமும், மலர்தலும் கூம்பலும், பேரோடும் புகழோடும்.
4. வியங்கோள் வினைமுற்று
   செய்க, வாழிய.
5. செய்யுளிசை (இசைநிறை) அளபெடை - படூஉம்
6. இன்னிசை அளபெடை - வளர்க்குறூஉம்
7. சொல்லிசை அளபெடை - தீதுஒரீஇ, தழீஇ, செலீஇய
8. ஏவல் பன்மை வினைமுற்று - உணர்மின், சொல்லுமின்
9. மரூஉமொழி - சோணாடு
10. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் - அவியா, இன்னா, கதுவிடா
11. வினைத்தொகை
    திருந்துமொழி, ஒழுகுநீர், வீங்குநீர், திரைகவுள், உயர்சினை, புனைகலம், ஈர்வளை, களிநடம், அலைகடல், அகல்முகில், செய்குன்று, தாழ்பிறப்பு, படர்முகில், உயர்எண்ணம், முதிர்மரம், பொங்குதாமரை
12. ஒருபொருட்பன்மொழி - ஓங்கியுயர்
13. பண்புத்தொகை
    முதுமரம், பெருங்களிறு, பசுங்கால, பைந்நிணம், வெஞ்சினம், எண்பொருள், நல்லுரை, கூர்ம்படை, கருங்காக்கை, தண்குடை, கருமுகில், நெடுந்தேர், நெடுந்தகை, பச்சூன், அருந்துயர், கடும்பகை, பேரறிவு, ஆருயிர், பேரிடி, சேவடி, பேரிஞ்சி, செழும்பொன்

## VII. 3. புணர்ச்சி விதி 2x 2 = 4 மதிப்பெண்கள்

1. விதி: "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"
   குருகுமுண்டு, நானென்று, உயிருண்டு, பகலுறை, யாருமில்லை, யானெவன், தமிழன்னை, இருளறுத்திடும், மானுழை, அறனல்ல, தமிழிலிலா, சீராக, எண்ணமெல்லாம், பம்பரமாகி, இவர்களிடம், வானாளும்
   1. குருகுமுண்டு = குருகும் + உண்டு
   2. குருகும்+ உண்டு
   3. "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"
   4. விதிப்படி ம் + உ = மு ஆனது.
   5. குருகுமுண்டு

2. விதி: 1. "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்"
2. "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"

நன்றன்று, சிலம்பொன்று, வண்டினம், மாசற்றார், விருந்தொரால், கற்பெனும், உனக்கில்லை, அன்புடை, வரகரிசி, வீறெய்தி, வண்டுறை, விளக்கேற்றி, பிழைப்பம்மா, செருக்கெழ, அழுதேங்கி, அறைந்தறைந்து, செத்தொழியும், ஒன்றென்ப, பிரித்தடுக்கி, திருந்தவை, ஆண்டவர்க்கு

1. நன்றன்று = நன்று + அன்று
2. நன்று (ற் + உ) + அன்று
3. "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்"
4. விதிப்படி 'உ' ஓடியது
5. நன்ற் + அன்று
6. "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"
7. விதிப்படி ற் + அ = ற ஆனது
8. நன்றன்று

3. விதி: "இயல்பினும் விதியினும் நின்றஉயிர்முன் கசதப மிகும்"

மணிக்கழுத்து, மதிக்குடை, தீக்குச்சி, வினைத்திட்பம், தீத்தாவும், வளைத்தோளி, மழைக்கண்ணீர், கொத்துப்பூ, மணிக்காசு, பத்தினிப்பெண்டிர்

1. மணிக்கழுத்து = மணி + கழுத்து
2. மணி (க்)+ கழுத்து
3. "இயல்பினும் விதியினும் நின்றஉயிர்முன் கசதப மிகும்"
4. விதிப்படி 'க்' வந்தது
5. மணிக்கழுத்து

4. விதி: "ஈறுபோதல்"

1. முதுமரம் = முதுமை + மரம்
2. முது(மை) + மரம்
3. ஈறுபோதல்
4. விதிப்படி மை போனது
5. முதுமரம்

5. விதி: 1. "ஈறுபோதல்"
2. "இனமிகல்"

பெருங்களிறு, பெருந்தெய்வம், பெருந்தேர், கடுந்திறல், செழும்பொன், கருங்கல், நெடுங்குவடு

1. பெருங்களிறு = பெருமை + களிறு
2. பெரு(மை) + களிறு
3. ஈறுபோதல்
4. விதிப்படி 'மை' போனது
5. பெரு(ங்) + களிறு
6. இனமிகல்
7. விதிப்படி 'ங்' வந்தது
8. பெருங்களிறு

6. விதி: "பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும்"

பூஞ்சோலை, பூங்கொடியாள்

1. பூங்கொடியாள் = பூ + கொடியாள்
2. பூ(ங்) + கொடியாள்
3. "பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும்"
4. விதிப்படி 'ங்' வந்தது
5. பூங்கொடியாள்

## VII. 4. திணை, துறை 1 x 4 = 4 மதிப்பெண்கள்

1. பொதுவியல் திணை
   1. திணைவிளக்கம்
      1. வெட்சி முதலிய புறத்திணைகளுக்குப் பொதுவான செய்திகளைக் கூறுவது.
      2. வெட்சி முதலிய புறத்திணைகளில் கூறாத செய்திகளைக் கூறுவது.
   2. சான்று "பல்சான்றீரே பல்சான்றீரே" என்ற புறநானூற்றுப் பாடல்.
   3. பொருத்தம்

'நன்மை செய்யமுடியவில்லையென்றாலும், தீமை செய்யாதே' என்ற பொதுவான செய்தியைக் கூறுவதால் பொருந்தும்.

2. பொருண்மொழிக்காஞ்சித்துறை

1. துறைவிளக்கம்

துறவியராகிய 'மெய்யுணர்ந்தோர் கண்டபொருள் இது என அதன் இயல்பை உணர்த்தியது.

2. சான்று 'பல்சான்றீரே பல்சான்றீரே'' என்ற புறநானூற்றுப் பாடல்.

3. பொருத்தம்

'நன்மை செய்யமுடியவில்லையென்றாலும், தீமை செய்யாதே' என்ற மெய்ப்பொருளைக் கூறுவதால் பொருந்தும்.

## VII. 5. அணி 1x 4 = 4 மதிப்பெண்கள்

1. சொற்பொருள் பின்வருநிலையணி

1. அணிவிளக்கம்

வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து, தந்த பொருளே மீண்டும் மீண்டும் தருவது.

2. சான்று

''உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து''

3. பொருத்தம்

'உதவி' என்று வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து 'உதவி' என்று தந்த பொருளையே மீண்டும் மீண்டும் தருகிறது.

2. உவமையணி

1. அணிவிளக்கம்

உவமை, பொருள், உவமஉருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாக வருவது.

2. சான்று

''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை''

3. உவமை - அகழ்வாரைத் தாங்கும் நிலம்
பொருள் - இகழ்வார்ப் பொறுத்தல்
உவம உருபு - போல

4. விளக்கம்

பூமி தம்மைத் தோண்டுபவரையும் பொறுத்துக்கொள்கிறது. அதுபோல ஒருவன் தம்மை இகழ்பவரையும் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

3. எடுத்துக்காட்டு உவமையணி

1. அணிவிளக்கம்

உவமை ஒரு தொடராகவும், பொருள் ஒரு தொடராகவும் அமைய, போல என்னும் உவமஉருபு மறைந்து வருவது.

2. சான்று

''இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை''

3. உவமை - இன்மையுள் இன்மை விருந்தொரால்
பொருள் - வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை
(போல என்னும் உவமஉருபு மறைந்து வந்துள்ளது)

4. விளக்கம்

வறுமையுள் வறுமை என்பது விருந்தோம்ப இயலாநிலையில் வாழ்வது. அதுபோல வலிமையுள் வலிமை என்பது அறிவற்றவர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக்கொள்வதாகும்.

## VIII. பொருத்துக 4 x 1 = 4 மதிப்பெண்கள்

1.

| திணை | | நிலம் |
|---|---|---|
| 1. குறிஞ்சி | - | மலையும் மலை சார்ந்த இடமும் |
| 2. முல்லை | - | காடும் காடு சார்ந்த இடமும் |
| 3. மருதம் | - | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| 4. நெய்தல் | - | கடலும் கடல் சார்ந்த இடமும் |

2. திணை — பாடியோர்
   1. குறிஞ்சி - கபிலர்
   2. முல்லை - பேயனார்
   3. மருதம் - ஓரம்போகியார்
   4. நெய்தல் - அம்மூவனார்
3. சொல் — பொருள்
   1. தினை - மிகச்சிறிய அளவு
   2. பனை - ஒரு பேரளவு
   3. சால்பு - நிறைபண்பு
   4. துப்பு - பற்றுக்கோடு
4. சொல் — பொருள்
   1. மடவார் - அறிவிலிகள்
   2. ஒரால் - நீக்குதல்
   3. பொன்றும் - அழியும்
   4. விருந்து - புதியவராய் வந்தவர்
5. சொல் — பொருள்
   1. செறுவார் - பகைவர்
   2. ஒட்பம் - அறிவுடைமை
   3. உய்ப்பது - செலுத்துவது
   4. பேதைமை - அறிவு இன்மை
6. சொல் — பொருள்
   1. ஒல்காமை - தளராமை
   2. விழுமம் - துன்பம்
   3. திண்ணியர் - வலியர்
   4. வீறு - சிறப்பு
7. புலவர்கள் — இயற்றிய நூல்கள்
   1. இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம்
   2. திருத்தக்கதேவர் - சீவகசிந்தாமணி
   3. நாதகுத்தனார் - குண்டலகேசி
   4. சீத்தலைச் சாத்தனார்- மணிமேகலை
8. நூல் — ஆசிரியர்
   1. இராசராசசோழனுலா - ஒட்டக்கூத்தர்
   2. திருவேங்கடத்தந்தாதி - பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்
   3. மதுரைக்கலம்பகம் - குமரகுருபரர்
   4. முக்கூடற்பள்ளு - ஆசிரியர் பெயர் தெரியவில்லை
9. நூல் — ஆசிரியர்
   1. குயில்பாட்டு - பாரதியார்
   2. அழகின் சிரிப்பு - பாரதிதாசன்
   3. துறைமுகம் - சுரதா
   4. பால்வீதி - அப்துல்ரகுமான்
10. பாடல் — கவிஞர்
   1. புத்தகசாலை - பாரதிதாசன்
   2. தீக்குச்சிகள் - அப்துல்ரகுமான்
   3. சிக்கனம் - சுரதா
   4. காடு - வாணிதாசன்
11. சொல் — பொருள்
   1. சுவடி - நூல்
   2. வெய்யோன் - கதிரவன்
   3. செட்டு - சிக்கனம்
   4. சிந்தை - உள்ளம்

12. நூல் - ஆசிரியர்

| நூல் | | ஆசிரியர் |
|---|---|---|
| 1. மணிமேகலை | - | சீத்தலைச்சாத்தனார் |
| 2. தேவாரம் | - | சுந்தரர் |
| 3. சீறாப்புராணம் | - | உமறுப்புலவர் |
| 4. இரட்சண்ய யாத்திரிகம் | - | கிருஷ்ணப்பிள்ளை |

13. நூல் - சமயம்

| நூல் | | சமயம் |
|---|---|---|
| 1. மணிமேகலை | - | பௌத்தம் |
| 2. நீலகேசி | - | சமணம் |
| 3. இரட்சண்ய யாத்திரிகம் | - | கிறித்தவம் |
| 4. சீறாப்புராணம் | - | இசுலாம் |

14. திணை - பொழுது

| திணை | | பொழுது |
|---|---|---|
| 1. குறிஞ்சி | - | யாமம் |
| 2. முல்லை | - | மாலை |
| 3. மருதம் | - | வைகறை |
| 4. நெய்தல் | - | எற்பாடு |

15. திணை - தொழில்

| திணை | | தொழில் |
|---|---|---|
| 1. மருதம் | - | நெல் அரிதல் |
| 2. குறிஞ்சி | - | தேன் எடுத்தல் |
| 3. முல்லை | - | காளை தழுவல் |
| 4. நெய்தல் | - | மீன் பிடித்தல் |

16. திணை - உரிப்பொருள்

| திணை | | உரிப்பொருள் |
|---|---|---|
| 1. முல்லை | - | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| 2. நெய்தல் | - | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| 3. குறிஞ்சி | - | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| 4. பாலை | - | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

## IX. விடை தேர்க 16 x 1 = 16 மதிப்பெண்கள்

### 1.வாழ்த்து

1. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர் - **ஒட்டக்கூத்தர்.**
2. 'ஒன்றேயென்னின்..' அமைந்துள்ள காண்டம் - **யுத்த காண்டம்.**
3. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத்தலைவன் - **முருகன்.**
4. சோழ நாட்டுத் திருவழுந்தூரில் பிறந்தவர் - **கம்பர்.**
5. 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' பாடியவர் - **வெ.இராமலிங்கனார்.**
6. வரதநஞ்சையப்பிள்ளை இயற்றிய குறவஞ்சி - **தமிழரசி குறவஞ்சி.**
7. உப்புச்சத்தியாக்கிரகத்தில் சிறைத்தண்டனை பெற்றவர் - **வெ.இராமலிங்கனார்.**
8. நாமக்கல் கவிஞருக்கு நடுவணரசு அளித்த விருது - **பத்மபூஷண்.**
9. வெ.இராமலிங்கனார் பிறந்த ஊர் - **மோகனூர்.**
10. இராமலிங்கனார் எக்கலையில் வல்லவர்? - **ஓவியக்கலையில்.**
11. கற்றோரால் 'புலவரேறு' எனப்பட்டவர் - **வரதநஞ்சையப்பிள்ளை.**
12. கம்பரை ஆதரித்தவர் - **சடையப்ப வள்ளல்.**
13. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத்தலைவன் கோயில் உள்ள இடம் - **சுவாமிமலை.**
14. கம்பர் எதில் பெரியவர் - **கல்வியில்.**

### 2. தொகை நூல்கள்

15. புறம், புறப்பாட்டு என வழங்கப் பெறுவது - புறநானூறு.
16. புறநானூற்றின் திணைகள் - 11.
17. தமிழரின் வாழ்வியல் சிந்தனைக் கருவூலம் - புறநானூறு.
18. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் - 65.
19. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று - பரிபாடல்.
20. மணிமிடைப்பவளத்தில் உள்ள பாடல்கள் - 180.
21. அகநானூற்றுப்பாக்களின் அடிவரையறை - 13 அடி முதல் 31 அடி வரை.
22. நற்றிணையைத் தொகுப்பித்தவன் - பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி.
23. நற்றிணைப்பாக்களின் அடிவரையறை - 9 அடி முதல் 12 அடிவரை.

24. கபிலரை 'வாய்மொழிக்கபிலர்' என்று போற்றியவர் - நக்கீரர்.
25. குறுந்தொகைக்குக் கடவுள் வாழ்த்து பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்.
26. அகப்புறப் பாடல்களைக் கொண்ட நூல் - பரிபாடல்.
27. அகநானூற்றில் 1,3 என ஒற்றைப்படையாக வரும் திணை - பாலைத்திணை.
28. 'அஞ்சிலோதி' - இலக்கணக்குறிப்பு - அன்மொழித்தொகை.
29. 'பராய்க்கடன்' என்றால் - வேண்டிக்கொள்ளுதல்.
30. 4 அடிச்சிறுமையும் 8 அடிப்பெருமையும் உடைய நூல் - குறுந்தொகை.
31. அகநானூற்றுக்கு வழங்கும் வேறுபெயர் - நெடுந்தொகை.
32. குறுந்தொகையில் உள்ள மொத்தப் பாடல்கள் - 402.
33. சங்கப்பாடல்கள் பலவும் எந்த இலக்கண நூலுக்கு இலக்கியங்களாய்த் திகழ்கின்றன - தொல்காப்பியம்.
34. ஐங்குறுநூறைத் தொகுத்தவர் - கூடலூர் கிழார்.

## 3. திருக்குறள்

35. குறட்பா என்பது - ஈரடி வெண்பா.
36. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் - 38.
37. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள் - 9.
38. திருவள்ளுவராண்டின்படி திருவள்ளுவர் வாழ்ந்த காலம் - கி.மு. 31.
39. பொருட்பாலின் இயல்கள் - அரசியல், அங்கவியல், ஒழிபியல்.
40. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது - திருவள்ளுவமாலை.
41. 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' என்றவர் - பாரதிதாசன்.
42. பொருட்பாலில் உள்ள அதிகாரங்கள் - 70.
43. பொறுமைக்குச் சான்றாக வள்ளுவர் கூறுவது - பூமி (நிலம்).
44. அறத்துப்பாலில் உள்ள குறள்கள் - 380.
45. 'உத்தரவேதம்' எனப்பெயர்பெற்றது - திருக்குறள்.
46. மாதானுபங்கி என புலவர்களால் பாராட்டப்படுபவர் - திருவள்ளுவர்.

## 4. தொடர்நிலைச்செய்யுள்

47. சிலப்பதிகாரத்தில் உள்ள காண்டங்கள் - 3.
48. சிலப்பதிகார உரையாசிரியருள் ஒருவர் - அரும்பத உரைகாரர்.
49. சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் சிறப்புப்பெயர்களில் ஒன்று - உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்.
50. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு - காதை.
51. 'தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவைதேறும் சிலப்பதிகாரம்' என்று பாராட்டியவர் - கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.
52. வரி என்பது - இசைப்பாடல்.
53. தாம் இயற்றிய இராமகாதைக்குக் கம்பர் இட்ட பெயர் - இராமவதாரம்.
54. கம்ப நாடகத்தின் யாப்பு வண்ணங்களுக்குக் கூறப்படும் கணக்கீடு - 96.
55. கம்பராமாயணத்திலுள்ள காண்டங்களின் எண்ணிக்கை - 6.
56. உத்தரகாண்டத்தைப் பாடியவர் - ஒட்டக்கூத்தர்.
57. சுந்தர காண்டம் இராமாயணத்தில் - 5ஆம் காண்டம்.
58. 'சுந்தரன்' என்ற பெயரால் இராமாயணத்தில் வழங்கப்படுபவர் - அனுமன்.
59. 'சிறிய திருவடி' என்று அழைக்கப்படுபவர் - அனுமன்.
60. தனயை என்ற சொல்லின் பொருள் - மகள்.
61. இராமன் கொடுத்ததாகச் சீதையிடம் அனுமன் காட்டியது - கணையாழி.
62. சீதை தன்னை மீட்டுச் செல்ல வேண்டி விதித்த காலம் - ஒரு திங்கள்.
63. வீரமாமுனிவரின் தாய்நாடு - இத்தாலி.
64. கொன்ஸ்டான் என்னும் சொல்லுக்குப் பொருள் - அஞ்சாதவன்.
65. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி - சதுரகராதி.
66. திருக்குறளின் அறத்துப்பால் மற்றும் பொருட்பாலை வீரமாமுனிவர் மொழிபெயர்த்தது - இலத்தீன் மொழியில்.
67. தேம்பாவணி நூலின் பாட்டுடைத் தலைவர் - சூசை மாமுனிவர்.
68. கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் - தேம்பாவணி.
69. 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' என்றவர் - இளங்கோவடிகள்.
70. 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' எனப்பாராட்டியவர் - பாரதியார்.
71. 'தைரியநாத சுவாமி' என்று அழைக்கப்படுபவர் - வீரமாமுனிவர்.
72. சிலப்பதிகாரம் - பொருள் - சிலம்பினால் அதிகரித்த கதை.

73. 'மருகி' என்பதன் பொருள் - மருமகள்.
74. தேம்பாவணியில் உள்ள காண்டங்கள் - 3.
75. 'தொன்னூல் விளக்கம்' நூலை எழுதியவர் - வீரமாமுனிவர்.
76. 'சேரதாண்டவம்' நூலின் ஆசிரியர் - பாரதிதாசன்.
77. யாருடைய வேண்டுகோளின்படி சிலப்பதிகாரம் பாடப்பட்டது? - சீத்தலைச்சாத்தனார்.
78. கம்பராமாயணக் காப்பியம் எவ்வகை நூல்? - வழிநூல்.
79. பாவேந்தர் வேற்றுநாட்டைச் சேர்ந்த எந்தப்புலவரோடு ஒப்பிடப்படுகிறார்? - இரசூல்கம்சதோவ்.

## 5. சிற்றிலக்கியங்கள்

80. உள்ளுறை உவமத்தில் உவமிக்கப்படும் கருப்பொருள் 'இது'வாக அமையக் கூடாது - தெய்வம்.
81. 'கவிப்பேரரசர்' எனப்படுபவர் - கம்பர்.
82. கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசன் என்றழைக்கப்படுபவர் - ஒட்டக்கூத்தர்.
83. 'திவ்விய கவி' என்றழைக்கப்படுபவர் - பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.
84. தமிழில் தோன்றிய முதல் கலம்பகம் - நந்திக்கலம்பகம்.
85. 'புலன்' என்னும் இலக்கிய வகை - பள்ளு.
86. 18 உறுப்புகளால் பாடப்படும் சிற்றிலக்கியம் - கலம்பகம்.
87. 'பிரபந்தம்' என்னும் வடசொல் உணர்த்தும் பொருள் - நன்கு கட்டப்பட்டது.
88. முக்கூடற்பள்ளுக்குரிய பாவகை - சிந்துப்பா.
89. 'சொற்றொடர்நிலை' என்று வழங்கப்படுவது - அந்தாதி.
90. 'சிற்றிலக்கியங்கள் 96' என்று பட்டியலிடும் நூல் - சதுரகராதி.
91. உலாவிற்குரிய பாவகை - கலிவெண்பா.
92. மதுரைக்கலம்பகத்தின் ஆசிரியர் - குமரகுருபரர்.
93. 'தக்கயாகப்பரணி' எழுதியவர் - ஒட்டக்கூத்தர்.
94. குமரகுருபரர் 'இருகண்'களாகப் பாவித்தது - தமிழையும், தெய்வத்தையும்.
95. 'சிற்றிலக்கியங்களின் இலக்கணம்' கூறும் நூல் - பாட்டியல் நூல்கள்.
96. கதம்பம் என்பதே கலம்பகம் என்றானது எனக்கூறியவர் - உ.வே.சா.
97. சைவ, வைணவங்களை ஒருங்கிணைக்கும் இலட்சியம் கொண்ட நூல் - முக்கூடற்பள்ளு.

## 6. மறுமலர்ச்சிப்பாடல்கள்

98. பாரதிதாசனின் இயற்பெயர் - சுப்புரத்தினம்.
99. பாரதிதாசன் சாகித்திய அகாடமிப் பரிசுபெற்ற நூல் - பிசிராந்தையார்.
100. பாரதிதாசன் வெளியிட்ட இதழ் - குயில்.
101. 'வாழ்வினிற் செம்மையைச் செய்பவள் நீயே' என்ற பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்ற அரசு - புதுவை அரசு.
102. வடமொழியில் பாரதம் பாடியவர் - வியாசர்.
103. பாஞ்சாலி சபதத்தில் உள்ள சருக்கங்கள் - 5.
104. 'நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்' என்றவர் - பாரதியார்.
105. 20ஆம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் - பாரதியார்.
106. செந்தமிழைச் செழுந்தமிழாகக் காண விரும்பியவர் - பாரதிதாசன்.
107. பிரெஞ்சுக் குடியரசுத்தலைவரால் 'செவாலியர்' விருதுபெற்றவர் - வாணிதாசன்.
108. கவிஞரேறு, பாவலர்மணி முதலிய பட்டங்கள் பெற்றவர் - வாணிதாசன்.
109. சுரதா தமிழ்வளர்ச்சித்துறையின் பரிசு பெற்ற நூல் - தேன்மழை.
110. தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் 'தமிழன்னை விருது' பெற்றவர் - அப்துல் ரகுமான்.
111. 'உவமைக்கவிஞர்' எனப்படுபவர் - சுரதா.
112. நல்லாசிரியருக்கான டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருதுபெற்றவர் - தாரா பாரதி.
113. 'பாரதியின் கவிதா மண்டலத்தைச் சார்ந்த சுப்புரத்தினம்' என்று பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டவர் - பாரதிதாசன்.
114. பாரதிதாசனிடம் தொடக்கக்கல்வி பயின்றவர் - வாணிதாசன்.
115. 'பாவேந்தர் நினைவுப்பரிசு' பெற்ற முதற்பாவலர் - சுரதா.
116. உவமைக்கவிஞர் சுரதாவின் இயற்பெயர் - இராசகோபாலன்.
117. தமிழகத்தின் 'வேர்ட்ஸ்வர்த்' எனப்படுபவர் - வாணிதாசன்.
118. 'கல்லாரைக் காணுங்கால் கல்விநல்காக் கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்' எனப்பாடியவர் - பாரதிதாசன்.
119. இரட்டைக்கிளவி போல் இணைந்தே வாருங்கள் பிரிந்தால் பொருளில்லை எனப்பாடியவர் - சுரதா.

120. 'பாரதி' என்ற சொல்லின் பொருள் - கலைமகள்.
121. 'இமயம் எங்கள் காலடியில்' நூலின் ஆசிரியர் - ஆலந்தூர் கோ.மோகனரங்கன்.
122. 'தமிழ் - பிரெஞ்சு கையகரமுதலி' வெளியிட்டவர் - வாணிதாசன்.
123. 'பால்வீதி' நூலின் ஆசிரியர் - அப்துல்ரகுமான்.
124. மாலைக்காலத்தை வருணித்தவர் - பாரதியார்.
125. 'மறுமலர்ச்சிப்பாடல்களின் உயிர்நாடி' - மானுடம் பாடும்நெறி.

## 7. வழிபாட்டுப்பாடல்கள்

126. 'கிறித்துவக் கம்பர்' என்றழைக்கப்பட்டவர் - ஹெச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை.
127. 'சின்னச்சீறா' நூலை எழுதியவர் - பனுஅகமது மரைக்காயர்.
128. சுந்தரர் தேவாரம் - 7 ஆம் திருமுறை.
129. ஆழ்வார்களின் திவ்வியப்பிரபந்தத்திற்கு உரை எழுதியவர் - பெரியவாச்சான் பிள்ளை.
130. கடிகை முத்துப்புலவரின் மாணவர் - உமறுப்புலவர்.
131. வழிபாட்டுப்பாடலில் திருமாலைப் பாடியவர் - குலசேகராழ்வார்.
132. 'தம்பிரான் தோழர்' என்றழைக்கப்பட்டவர் - சுந்தரர்.
133. 'பில்கிரிம்ஸ் பிராகிரஸ்' நூலை எழுதியவர் - ஜான்பனியன்.
134. உமறுப்புலவர் எழுதிய நூல் - சீறாப்புராணம்.
135. இரட்சண்ய யாத்திரிகத்துள் இடையிடையே அமைந்த இசைப்பாடல்களின் பெயர் - தேவாரம்.
136. இறைவன் ஆவணங்காட்டி சுந்தரரை ஆட்கொண்ட ஊர் - திருவெண்ணெய்நல்லூர்.
137. 'நீலகேசி' என்னும் நூலின் ஆசிரியர் - ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

## X. நிரப்புக 2 x 2 = 4 மதிப்பெண்கள்

1. காலத்தினாற் செய்த <u>நன்றி</u> சிறிதெனினும்
   ஞாலத்தின் மாணப் <u>பெரிது</u>.
2. பயன்தூக்கார் செய்த <u>உதவி</u> நயன்தூக்கின்
   நன்மை <u>கடலின்</u> பெரிது.
3. தினைத்துணை <u>நன்றி</u> செயினும் பனைத்துணையாக்
   கொள்வர் பயன் <u>தெரிவார்.</u>
4. உதவி வரைத்தன்று உதவி <u>உதவி</u>
   செயப்பட்டார் <u>சால்பின்</u> வரைத்து.
5. மறவற்க மாசற்றார் <u>கேண்மை</u> துறவற்க
   துன்பத்துள் துப்பாயார் <u>நட்பு.</u>
6. எழுமை <u>எழுபிறப்பும்</u> உள்ளுவர் தங்கண்
   விழுமம் <u>துடைத்தவர்</u> நட்பு.
7. நன்றி மறப்பது <u>நன்றன்று</u> நன்றல்லது
   <u>அன்றே</u> மறப்பது நன்று.
8. கொன்றன்ன <u>இன்னா</u> செயினும் அவர்செய்த
   ஒன்று <u>நன்றுள்ளக்</u> கெடும்.
9. எந்நன்றி <u>கொன்றார்க்கும்</u> உய்வுண்டாம் உய்வில்லை
   செய்ந்நன்றி <u>கொன்ற</u> மகற்கு.
10. அகழ்வாரைத் தாங்கும் <u>நிலம்போலத்</u> தம்மை
    <u>இகழ்வார்ப்</u> பொறுத்தல் தலை.
11. ஒறுத்தாரை யொன்றாக வையாரே <u>வைப்பர்</u>
    பொறுத்தாரைப் <u>பொன்போல்</u> பொதிந்து.
12. திறனல்ல தற்பிறர் செய்யினும் <u>நோநொந்</u>
    தறனல்ல <u>செய்யாமை</u> நன்று.
13. உண்ணாது <u>நோற்பார்</u> பெரியர் பிறர்சொல்லும்
    <u>இன்னாச்சொல்</u> நோற்பாரிற் பின்.
14. அறிவற்றங் காக்கும் <u>கருவி</u> செறுவார்க்கும்
    உள்ளழிக்க லாகா <u>அரண்</u>.
15. சென்ற இடத்தாற் <u>செலவிடா</u> தீதொரீஇ
    நன்றின்பால் <u>உய்ப்பது</u> அறிவு.

16. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
    மெய்ப்பொருள் காண்ப தறிவு.
17. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
    நுண்பொருள் காண்ப தறிவு.
18. எவ்வ துறைவது உலகம் உலகத்தோ
    டவ்வ துறைவது அறிவு.
19. அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
    அஃதறி கல்லா தவர்.
20. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
    தஞ்சல் அறிவார் தொழில்.
21. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
    அதிர வருவதோர் நோய்.
22. அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
    என்னுடைய ரேனு மிலர்.
23. வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்
    மற்றைய எல்லாம் பிற.
24. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
    திண்ணியர் ஆகப் பெறின்.
25. துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
    இன்பம் பயக்கும் வினை.

--------------முற்றும்------------

பள்ளிக் கல்வித்துறை
சேலம் மாவட்டம்

# மேல்நிலை இரண்டாமாண்டு
# தமிழ் இரண்டாம் தாள்

# முக்கிய வினா - விடை - வங்கி

# 2012 - 2013

வெளியீடு
முதன்மைக் கல்வி அலுவலர்
சேலம்.

## தமிழ் ஆசிரியர் குழு

1. அ.அம்பிகா, M.A.,B.ED.,M.PHIL., மு.க.ஆ. ஸ்ரீ இராமகிருஷ்ணா சாரதா மேல்நிலைப்பள்ளி, சேலம் - 5.
2. ம.சாந்தா, M.A.,M.ED.,M.PHIL., மு.க.ஆ. பாரதி வித்யாலயா மேல்நிலைப்பள்ளி, சேலம் - 7.
3. இரா.இராமமூர்த்தி, M.A.,M.A.,B.ED.,M.PHIL., மு.க.ஆ. அரசு மேல்நிலைப்பள்ளி, பனமரத்துப்பட்டி.
4. சு.தேவி, M.A.,B.ED.,M.PHIL., மு.க.ஆ. வைத்தீஸ்வரா மேல்நிலைப்பள்ளி, மேட்டூர்.
5. வை.கல்பனா, M.A.,B.ED.,M.PHIL., மு.க.ஆ. அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, சேலம்.
6. ப.மஞ்சுளா, M.A.,B.ED.,M.PHIL., மு.க.ஆ. அரசு மேல்நிலைப்பள்ளி, புதுச்சாம்பள்ளி.
7. ச.பொற்கொடி, M.A.,M.ED.,M.PHIL., மு.க.ஆ. அரசு மேல்நிலைப்பள்ளி, வேம்படிதாளம்.
8. நா. சித்ரா, M.A.,B.ED.,M.PHIL., மு.க.ஆ. அரசு மேல்நிலைப்பள்ளி, வனவாசி.
9. கா.தங்கமணி, M.A.,B.ED.,M.PHIL., மு.க.ஆ. அரசு மேல்நிலைப்பள்ளி, மகுடஞ்சாவடி.

## தமிழ் - இரண்டாம் தாள்
## மாணவர்களுக்கான அறிவுரைகள்

1. உரைநடையில் உள்ள 8 பாடங்களில் இருந்து 21 பெருவினாக்கள்(4 மதிப்பெண்கள்) தரப்பட்டுள்ளன. இதை மட்டும் படித்தால் கூட 24 மதிப்பெண்கள் பெற முடியும்.
2. உரைநடையில் உள்ள 8 பாடங்களில் இருந்து நான்கு நெடுவினாக்கள் (6 மதிப்பெண்கள்) கொடுக்கப்பட்டுள்ளன. இதை மட்டும் படித்தால் கூட 6 மதிப்பெண்கள் பெற முடியும்.
3. துணைப்பாடங்கள் மொத்தம் 10 உள்ளன. இவற்றில் 6 தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதை மட்டும் படித்தால் கூட இரண்டு துணைப் பாடக் கட்டுரையை எழுதி, 20 மதிப்பெண்கள் பெற முடியும்.
4. இலக்கிய நயம் பாராட்டல் (10 மதிப்பெண்கள்) எவ்வாறு எழுதுவது என்று எடுத்துக்காட்டுடன் தரப்பட்டுள்ளது.
5. ஆங்கிலப் பழமொழிக்கு இணையான தமிழ்ப் பழமொழி எழுதுதல் 29 வினாக்கள் (2 மதிப்பெண்கள்) கொடுக்கப்பட்டுள்ளன.
6. கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளுக்கு வாழ்க்கை நிகழ்வு எழுதுதல் எடுத்துக்காட்டுடன் தப்பட்டுள்ளது. இதே போன்று எழுதுதல் வேண்டும்.
7. மொழிப் பயிற்சி வினாக்கள் அனைத்திற்கும் எடுத்துக்காட்டுகளுடன் எழுதும் முறை தெளிவாக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் கொடுக்கப்பட்டுள்ள இந்த வினா விடை - வங்கியை முழுமையாகப் பயின்று முயற்சி செய்து தேர்வில் 100 சதவீத தேர்ச்சி அடைய வாழ்த்துகிறோம்.

இப்பணிக்கு எங்களுக்கு வாய்ப்பு அளித்த சேலம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு எங்களது உளமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

# தமிழ் இரண்டாம் மேனிலை இரண்டாமாண்டு
# தமிழ் இரண்டாம் தாள் - வினா வங்கி - 2012-2013
## பெருவினா

1. செந்தமிழ் நாடு, கொடுந்தமிழ் நாடு என்ற பிரிவுகள் பற்றிப் பரிதிமாற்கலைஞர் உரைப்பன யாவை?

சந்தனப் பொதிகையின் செந்தமிழ் முனிவராகிய அகத்தியரும், தமிழ் நாடனாகிய சௌந்தர பாண்டியன் என்னும் அரசனும் மங்காப் புகழுடைய சங்கப் புலவர் பெருமக்களும் கல்வி கேள்வி அறிவு நிலைகளில் தனிச்சிறப்புடன் விளங்கியிருந்த நலந்திகழ் பாண்டிய வளநாடு என்பதுவே செந்தமிழ் நாடு ஆகும்.

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குடநாடு, கற்காநாடு, வேணாடு, பூழிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, அருவாவடநாடு, மலாடு, சீதநாடு, புனல் நாடு என்னும் பன்னிரண்டும் கொடுந்தமிழ்நாடு ஆகும்

2. இசைத்தமிழ் என்பது யாது? முற்காலத்தும் இக்காலத்தும் விளங்கும் இசைத்தமிழ் நூல் வகைகள் யாவை?

இசைத்தமிழ்

பண்ணொடு கலந்தும் தாளத்தொடு கூடியும் இயங்கும் செந்தமிழ்ப் பாட்டுகளாலும், கொடுந்தமிழ்ப் பாட்டுகளாலும் அமைந்த இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களுமாகும் நூல்களின் தொகுதி இசைத்தமிழாம். இதில் கீர்த்தனைகள் வரிப்பாடல்கள் சிந்து, ஆனந்தக் களிப்பு, கும்மி, தெம்மாங்கு முதலியனவும் அடங்கும்

இயற்றமிழ்ச் செய்யுள்கள் இசையெடுத்துத் தாளம் அறுத்துப் பாடப்பட்டால் அவை இசைத்தமிழின் பாற்படும்.

முற்காலத்து விளங்கிய இசைத்தமிழ் நூல்கள்

பெருநாரை, பெருங்குருகு, இசைநுணுக்கம், தாளவகை யோத்து முதலிய நூல்கள்.

இக்காலத்து விளங்கும் இசைத்தமிழ் நூல்கள்

கந்தபுராணக் கீர்த்தனை, பெரியபுராணக் கீர்த்தனை, சங்கீத சந்திரிகை முதலிய நூல்கள்.

3. தமிழ்மொழியின் மீது பற்றுக் கொள்ளாத தமிழ் மக்களைப் பரிதிமாற்கலைஞர் கடிந்துரைப்பது யாங்ஙனம்?

ஆங்கில மொழி கற்ற தமிழ் மக்களுள் பலர் தமது தாய்மொழியாகிய தமிழைப் படிக்க வேண்டுவது அவசியமன்று என்று கூறுவர்

அவர் ஆங்கில மொழியின் சிறப்பினை மட்டும் கூறி அமைவது நன்றாகுமெனினும் தமிழ் கற்க வேண்டுவது அவசியமன்று என்பது அறியாமையோடு கூடிய துணிந்துரையாகும்.

இது தாய்நாட்டுப் பற்றும், தாய்மொழிப் பற்றும் அற்றவர் கூற்றாகும். இவ்விரண்டும் மிக்க ஆங்கிலேயர் இவ்விரண்டும் அற்றவர்களை மதிக்கமாட்டார்.

ஆங்கிலம் முதலிய பிற மொழிக்குரியராய் அம்மொழிகள் வல்லுநர் எல்லாம் தமிழ் மொழியின் மீது ஆர்வம் உடையவராய்த் தமிழைக் கற்றனர்.

தமிழ் நூல்களைத் தங்கள் மொழிகளில் மொழி பெயர்த்துக் கொள்ளுதலை உற்று நோக்கியேனும் தமிழ்க் கல்வி அவசியமன்று என்பார்க்கும் புத்தி வரட்டும் எனப் பரிதிமாற்கலைஞர் கடிந்துரைக்கிறார்

4. உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு.வி.க கூறுவன யாவை?

உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணம் பலபடக் கூறலாம் மனிதனிடத்தில் உள்ள அழுக்காறு, அவா, வெகுளி முதலியன அவனைச் சமரச ஞானியாக்குவதில்லை.

சமரசத்தைப் பற்றிப் பேசுதலும் எழுதுதலும் எளிது. அதை நடைமுறைப்படுத்துதல் அரிது.

எனவே மனிதன் சமரசத்தைப் பேசுவதைக் காட்டிலும், அதை நடைமுறையில் கொண்டுவர முயல்வதே அறிவுடைமை ஆகும்.

5. நமது நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை என்று திரு,வி.க வருந்தி உரைப்பனவற்றை எழுதுக.

பெருங்கொலை என்பது பற்றித் திரு.வி.க உரைப்பன,

பெரியோர் அறிவுறுத்திய கொள்கைகளைப் புதைத்து, அவர்தம் உருவத்தை மட்டும் வந்தனை வழிபாடு செய்யும் பொய் ஒழுக்கம் நம் நாட்டில் நீண்ட நாள் வழக்கிலிருக்கிறது.

“சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர் சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்” என்றும், அருளிய பெரியோரை வழிபடும் மக்கள் சாதியையே கடவுளாகவும், சமயமாகவும் கொண்டுள்ளனர்.

இவர்கள் சாதியை மறுத்துச் சமரசத்தில் திளைத்த பெரியோரை வழிபடுவதில் பொருளில்லை. பெரியோர் அறிவுறுத்திய நெறி நின்று ஒழுகுவதே உண்மையான வழிபாடாகும்.

6. கவிதை என்பது யாது? என்ற வினாவிற்கு வோர்ட்ஸ் வொர்த், கோலரிட்ஜ் ஆகியோர் கூறும் விளக்கங்கள் யாவை?

"ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவது தான் கவிதை" எனத் துணிந்தார் வோர்ட்ஸ்வொர்த். கோபம் எவ்வாறு உண்டாகிறது? ஆற்றல் நிரம்பிய உணர்ச்சி தானாக பொங்கி வருவதனால் இது கவிதையாகுமா?

முன்பு கிளர்ந்த ஓர் உணர்ச்சிப் பெருக்கை மீண்டும் அமைதி நிலையிலிருந்து நினைவிற்குக் கொணரும் போது தான் கவிதை தோன்றுகிறது என விளக்கினார் வோர்ட்ஸ்வொர்த்.

கோலரிட்ஜ் கருத்து

"சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது உரைநடை. சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது கவிதை" என்று முடிவு செய்தார்.

7. கீட்ஸ், ஜான் ரஸ்கின், பவணந்தி முனிவர் ஆகியோர் கூறும் கவிதையின் இயல்புகள் யாவை?

கவிதை பற்றிக் கீட்ஸ்

"கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளி மழையே கவிதை" என்றார் கீட்ஸ். மேலும் அவர் ஆற்றலின் சிகரம் என்றும் ஆற்றல் தனது வலப்புறத்தில் தலை சாய்த்துப் பாதி உறங்கிக் கொண்டிருக்கும் நிலை என்றும் கூறியுள்ளார்.

ஜான் ரஸ்கின்

"சீரிய உணர்ச்சிக்குரிய காரணங்களைப் பாவனாசக்தியால் குறிப்பிடுவதே கவிதையாகும்" என்று இலக்கணமும் வகுக்கிறார் ரஸ்கின்.

பவணந்தி முனிவர்

பவணந்தி முனிவர் பலவகைத் தாதுக்களினாலும் உயிர்க்கு இடமாய் இயற்றப்பட்ட உடம்பு போல நால்வகைச் சொற்களால் பொருளுக்கு இடமாய்க் கல்வியறிவினால் செய்யுளியற்ற வல்லவர் அணிபெற இயற்றுவது செய்யுளாம் என்று இலக்கணம் வகுத்துள்ளார்.

8. பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்களைப் பற்றி எழதுக

பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்கள்

பழந்தமிழர் அவ்வவ்விடங்களுக்குத் தக்க தொழிலை மக்கள் மேற்கொண்டனர்.

மலை நாட்டு மக்கள்

தேனெடுப்பது, தினை விதைப்பது, கிழங்கு அகழ்வது முதலிய தொழில்களை மேற்கொண்டனர்.

காட்டு நில மக்கள்

ஆநிரை மேய்ப்பது, பால் கடைவது, வரகு விளைப்பது முதலிய தொழில்களை மேற்கொண்டனர்.

வயல் வெளியில் இருப்போர்

உழவு செய்வது, நகரமைப்பது, ஆட்சி புரிவது முதலிய தொழில்களை மேற்கொண்டனர்.

கடற்கரைகளிலிருப்பவர்

முத்துக் குளித்தல், உப்பு விளைத்தல், மரக்கலத்திலேறி அலைகடலில் சென்று வாணிகம் செய்தல் முதலிய தொழில்களை மேற்கொண்டனர்.

9. முன்னோர்கள் நனிநாகரிகராய் விளங்கிய பான்மையை விளக்குக

தம்மோடு பழகியவர்கள் தமக்கு நஞ்சு ஊட்டினும் தம்மவர்கள் என்னும் கண்ணோட்டத்தால் அதனை மறுக்காமல் உண்டு மேலும் அவர்களோடு வாழ்ந்திருந்தவர்கள் அக்காலப் பெரியோர்கள்.

இம் மேன்மையை அறியும் போது நம் உள்ளம் மிக உருகுகின்றது. இத்தகைய கலந்த மனப்பான்மையையே நம் முன்னோர்கள் நாகரிகம் என்று கருதினார்கள்.

அவர்களின் உள்ள மாட்சிமை மிகவும் பெரிதாகும். தம்மைப் போன்ற மக்களிடத்தில் உயிர் நேயம் என்பது இல்லாதவரை நாகரிகர் என்று சொல்வதற்கு வழியில்லை.

இவ்வாறு சங்ககால முன்னோர்கள் நனிநாகரிகராய் விளங்கியிருந்தனர்.

10 பழந்தமிழ் மாந்தர் பெரிய முயற்சியையே மதித்து ஒழுகினர் என்பதனை விளக்குக.

வயலில் தன் வளையின் பக்கத்தில் வினளந்து கிடக்கும் நெற்பயிரை எலிகறித்துத் தன் வளைக்குள் சேர்த்துக் கொள்வது போன்ற எளிய முயற்சியைப் பழந்தமிழ் மாந்தர் அருவருத்தனர்

புலி தான் செல்லும் விசையினால் தனது இடப்பக்கத்தில் வீழ்ந்து கிடக்கும் பன்றியைச் சிறிதும் கண்ணெடுத்துப் பாராது. மறுநாள் ஒரு யானையோடு போரிட்டு அதனை வலப்பக்கத்தில் வீழ்த்தி, அதனையே உணவாய்க் கொள்கின்ற புலியைப் போன்ற பெருமுயற்சியுடைய மக்களை அவர்கள் போற்றினர்.

தாம் பெரிது முயன்று தேடும் பொருளையே அவர்கள் தமக்குரியதாய்க் கருதுபவர் பழந்தமிழ் மாந்தர்.

தமது செயலால் வருவதேயாயினும் எளிய முயற்சியில் வருவதை அவர்கள் மேன்மையாய் மதியார்.

11. மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை?

ஆ என்பது முதலில் மாடு எனப் பொருள் தந்தது. பின்பு பசுவிற்கு வரையறுக்கப்பட்டது. பண்டையுலகம் முழுமையும் மாடே மக்கள் செல்வமாய் இருந்தது. அதனால் செல்வம் மாடென வழங்கப்பட்டது.

மாடு முல்லை, மருதம் ஆகிய இருவகை நிலத்தாருக்கும், ஊனும், பாலும் உதவியது. இருவகை வேளாண்மைக்கும் உழுது இறைத்து உதவியது.

மாட்டின் ஊனும், பாலும் மட்டுமல்லாமல் அதன் தோல், கொம்பு, உரசனை, வால்மயிர், சாணம் முதலிய பிறவும் பயன்பட்டன.

உணவை விளைவிப்பதும், தானும் உணவாவதும் ஆகிய வேறு பல்லாற்றானும் உதவுவது மாடு.

பால் முதல் நெய்யீறாயுள்ள ஐந்தும் ஐயமுதம் எனப்படும். எனவே முன்னைத் தமிழர் மாட்டினைச் செல்வமாய்க் கருதினர்

12. ஆவின் சிறப்புகளாகப் பாவாணர் விதந்துரைப்பன யாவை?

ஆவும், ஆவேறும் மக்களுக்குப் பயன்படுவன. அவற்றுள் ஆவே அமைதியுடைமையும், அமுதளித்தலும், இருபால் கன்று ஈனுதலும் பற்றிச் சிறப்பாய்ப் போற்றப்பட்டது.

“பார்த்தால் பசுபோல பாய்ந்தால் புலிபோல்” என்பது பழமொழி.

ஆவுக்கு வாயுறை அளித்தல் முப்பத்திரண்டு அறக் கொடைகளுள் ஒன்றாய்க் கொண்டனர்.

‘இழக்கும் பொருளும் ஆவின் வாய்ப்பட்டால் ஆக்கமாம்’ என்னும் கருத்தில் “பாழாய்ப் போகிறது பசுவின் வாயிலே” என்னும் பழமொழி தோன்றியது.

ஆ தான் உண்டதை மீண்டும் தன் வாய்க்குக் கொண்டு வந்து அசையிட்டுச் செரிக்கச் செய்யும். அதனால் ஆவானது தலைமாணாக்கர்க்கு உவமையாய்க் கூறப்பட்டது.

13. அறுமுறை வாழ்த்து விளக்குக

மக்களால் வாழ்த்தப்படும் பொருள்களுள் ஆவும் ஒன்று.

அறுமுறை வாழ்த்து என்னும் தொல்காப்பிய பகுதியின் உரையில் “முனிவரும், பார்ப்பாரும், ஆனிரையும், மழையும் முடியுடை வேந்தரும், உலகும்” என்னும் அறுவரை வாழ்த்தல் என்று உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார்.

சமயக்குரவர் நால்வருள் ஒருவரான திருஞானசம்பந்தர் “வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்” என அந்தணர், தேவர் முதலியவருடன் ஆனினத்தையும் வாழ்த்தியுள்ளார்.

14. நீதி நூல்களின் பொதுவான இயல்பினைக் குறித்து எழுதுக .

பொதுவாக நீதி நூல்களில் இலக்கிய நயம் மிகுந்து காணப்படுவதில்லை.

மக்களுக்கு நீதிகளைக் கூற எழுந்தவையே நீதி நூல்கள் ஆகும். மக்கள் இவ்வாறு நடக்க வேண்டும் என்று விதிமுறைகளை விதித்தும், எவ்வாறு நடக்கக் கூடாது என்று விலக்கியும் செல்வது நீதி நூல்களின் இயல்பாகும்.

நீதி நூல்களில் கவிநயம் என்பது அரிதாகத்தான் இருக்கும். மக்களின் வாழ்க்கையைச் சீர்ப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்கும் ஏற்ற நீதிகளைக் கூற எழுந்தவையே நீதி நூல்கள் ஆகும் .

15. உவமைகளைக் கையாளும் விதத்திலேயே திருவள்ளுவர் நயமுண்டாகக் குறளமைத்திருப்பதை விளக்குக

“அறைபறை அன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்”

என்பது குறள். இக்குறளில் கயவர் தம்பட்டம் அடிக்கும் பறைக்கும் ஒப்பாவர் என வள்ளுவர் கூறுகிறார்.

பறை அடிப்பவன் தன் கையிலுள்ள பறையை முழக்கிச் செய்தியை அறிவிக்கிறான். அது பலர் காதில் போய்ச் சேர்கிறது. பல இடங்களில் கொண்டு சேர்க்கிறது.

கீழ்மக்களும் தாம் பிறரிடம் கேட்ட ஒரு இரகசியத்தை மூட்டை கட்டிக் கொண்டு, பலருக்கும் பங்கு போட்டுப் பிரித்து எடுத்துக் கொடுக்கிறான். இவனை அறைபறை என வள்ளுவர் கூறுவது சுவைக்கத்தக்கது.

இக்குறளில் உய்த்து என்ற சொல் நயமான சொல். தானே தேடிச் சென்று கூறுதல் என்பது இதன் பொருள். கயவரிடம் இரகசியம் கூறக்கூடாது என்னும் நீதியை வள்ளுவர் கூறியுள்ளமை பாராட்டத்தக்கது.

16. செல்வம் நிலைபேறு உடையதன்று என்பதை நாலடி எங்ஙனம் நயம்பட நவில்கிறது ?

"அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறு சிகை நீக்கி யுண்டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக்கூழெனில் செல்வமொன்று
உண்டாக வைக்கற்பாற் றன்று" (நாலடியார்)

இப்பாடல் அறுசுவை உண்டியை உண்டு களித்த பெருஞ்செல்வரும் ஒரு காலத்திலே கூழை இரந்துண்ண நேர்ந்தாலும் நேரும். ஆதலால் செல்வத்தை ஒரு பெரும் பொருளாக மதிக்க வேண்டா எனக் கூறுகிறது.

இதனுள் ஒன்றினுக்கு ஒன்று மறுதலையாக வைத்து தொகுத்திருப்பதில் அழகு திகழ்கிறது.

ஒரு காலத்தில் அறுசுவை உண்டியை ஆசனத்தில் அமர்ந்து, ஒரு பிடியிலிருந்து எடுத்த உணவை மறுபிடி வேண்டா என மறுத்து இல்லாள் ஊட்ட, உண்டவன் பின்னொரு காலத்தில் பல இடம் தேடி யாசித்து கூழ் கிடைத்தாலும் உண்ணும் நிலை ஏற்படும். இவ்வாறு செல்வம் நிலைபேறுடையது அன்று என்பதை நாலடியார் நயம்பட நவில்கிறது.

17. முதல் தடுமாற்றம் என்று மு.வ. குறிப்பது யாது ?

பள்ளிக் கூடத்துச் சிறுவன் எழுத்துக் கல்வி பெருமை உடையது என்று உணராமல் பலகையும், பலப்பமும் உயர்ந்தவை, சிறந்தவை என்று மயங்கக் கூடாது. அதை அவனுடைய வாழ்வில் நேர்ந்த ஒரு தடுமாற்றம் என்றே கூறல் வேண்டும்.

மக்கள் கூடி வாழத் தொடங்கிய போது வழிகாட்டிய தலைவன் தலையில் முடி சூட்டினர். கையில் கோல் கொடுத்தனர். சில தலைமுறைகள் கடந்த பிறகு அந்த முடியும், கோலும் உடையவன் எவனாயினும் அவனைத் தெய்வமாய்ப் போற்றி அடிபணிய வேண்டும் என்ற மூட நம்பிகை வளர்ச்சி பெற்றது. இஃது ஒரு தடுமாற்ற நிலையாகும் என்று மு.வ. அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

18. ஒரு படி முன்னேற்றம் என்று மு.வ. உரைப்பன யாவை ?

முடியும், கோலும் சிறப்பாக இருந்த காலத்தில் அவற்றைக் காப்பதற்காகப் படைகளும், படைக்கருவிகளும் பயன்பட்டன.

இன்றைய ஆட்சி முறையிலும் படைகளும், படைக்கருவிகளும் அவ்வாறு பயன்படுகின்றன. ஆயினும் அவற்றின் மதிப்பும், சிறப்பும் குறைந்து வருகின்றன. இது ஒரு படி முன்னேற்றம் என்று மு.வ. உரைக்கின்றார்.

19. ஏற்றத் தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு.வ. காட்டும் வழிகள் யாவை?

கிராம மக்கள் எதைக்கண்டும் மயங்காமல், தம் கூட்டுறவையும் உழைப்பையுமே நம்பி வாழத் தொடங்கினால், முடி, கோல், பணம், பதவி, கட்சி, தேர்தல் என்னும் எந்தப் பெரையும் சொல்லி மக்களை ஏய்க்க முடியாது.

எல்லாம் மனித வாழ்வுக்கு உதவ வந்த கருவிகள். கருவிகள் பயனற்றுப் போகுமானாலும் அவற்றைப் புறக்கணிப்பது மனிதர் இயல்பு. கடமையும் கூட. அவை யாவும் சிறியவை. மனித வாழ்வே பெரியது.

கூட்டுறவும் உழைப்புமே மனித வாழ்வின் உண்மையான அடிப்படை. கூட்டுறவுக்கு இடையூறு வந்தால் அதை வெல்ல அறப்படை வேண்டும். உழைப்புக்குப் பஞ்சம் வந்தால் அதை வெல்ல உழுநிலம் வேண்டும் .

இதனால் சுரண்டுவோரும், சுரண்டப்படுவோரும் இல்லாத ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம் அமையும் என்று மு.வ. கூறுகின்றார்

20 . தமிழகக் குடைவரைக் கோவில்களைப் பற்றி எழுதுக.

கோவில் கட்டடக்கலையைப் பற்றிக் கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து அறிய முடிகிறது. தமிழகத்தின் தென்பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஊர் பிள்ளையார்பட்டி. அவ்வூரில் உள்ள குடைவரைக் கோவிலே தமிழகத்தில் இன்று காணப்பெறும் குடைவரைக் கோவில்களுள் தொன்மையானது. இக்கோவில் பாண்டியர்களால் உருவாக்கப்பட்டதாகும். அதனை அடுத்துத் தமிழகத்தில் பல பகுதிகளில் குடைவரைக் கோவில்கள் உள்ளன.

பல்லவர்கள், பாண்டியர்கள், அதியர், முத்தரையர் ஆகியோர் அமைத்த குடவரைக் கோவில்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் காணப்படுகின்றன.

21. செப்புத் திருமேனியின் பொற்காலம் எது ? ஏன்?

செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என சோழர் காலத்தைக் குறிப்பிடலாம். எண்ணிக்கையிலும் அதிக அளவில் சோழர் காலத்தில்தான் செப்புத் திருமேனிகள் செய்யப்பட்டுள்ளன.

செம்பியன் மாதேவி போன்ற சோழர் காலப் பேரரசிகள் செப்புத் திருமேனிகள் செய்து அளிப்பதைத் தாம் இம்மண்ணுலகில் பிறந்ததன் கடமை என்று கருதிப் பக்தியுடன் செய்து அளித்துள்ளனர். சோழர் காலச் செப்புத் திருமேனிகள் கலை அழகும், கடவுள் தன்மையும் பொருந்தியவை.

சிவன் மூர்த்தங்களாயினும், திருமால் மூர்த்தங்களாயினும் அவை எவ்வாறு குறிக்கப்பட்டுள்ளனவோ அவ்வாறே செய்யப்பெற்றன. ஒவ்வொரு திருமேனியிலும் அக்காலச் சிற்பியின் கைத்திறன் பளிச்செனக் காணப்படும்.

## நெடுவினாக்கள்

1. 'தமிழ் உயர்தனிச் செம்மொழி' இத்தலைப்பின் கீழ் பரிதிமாற்கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக .

உயர்மொழி : தான் வழங்கும் நாட்டிலுள்ள பல மொழிகளுக்குத் தலைமையும், அவற்றின் மிக்க மேன்மையுள்ள மொழியே உயர் மொழி. இவ்விலக்கணப்படி ஆராய்ந்தால் தமிழ் மொழியானது தெலுங்கு முதலிய மொழிகளுக்கெல்லாம் தலைமையும், அவற்றினும் மிக்க மேன்மையும் உடைமையால் அஃது உயர் மொழியே என்பது பொருந்தும்.

தனிமொழி : தமிழ் தனித்து இயங்கவல்ல ஆற்றல் சான்ற தனிமொழியாகும். பிற மொழிகளின் உதவி இல்லாமல், சிறிதும் இடர்ப்பாடு இல்லாமல் தனித்து இனிமையாய் இயங்க வல்லதாகும். எனவே மொழிநூல் அறிஞர் பலர் தமிழ்மொழி தனிமொழி ஆகும் என்று கூறுகின்றனர்.

செம்மொழி திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தனிமொழியாய்த் தமிழ் அமைந்திருக்கிறது. தமிழில் இடர்ப்பட்ட சொல் முடிபுகளும் பொருள் முடிபுகளும் இல்லை. சொல்பவன் கருதிய பொருளைக் கேட்டு தெளிவாய் உணரக்கூடியதாய் இருக்கிறது. தமிழில் பழையன கழிதலும் புதியன புகுதலும் திருத்தம் அடைந்துள்ளது.

நாட்டின் நாகரிக முதிர்ச்சிக்கு ஏற்பச் சொற்களும் ஏற்பட்டு, மொழிகளும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்கள் ஏற்படுமிடத்துப் பிறமொழிச் சொற்களை எடுத்தாளாமல் தன் சொற்களே மிகுதல் வேண்டும்.

தமிழ் தூய மொழியாகும். எனவே தமிழ் மொழி செம்மொழி என்பது திண்ணம். தமிழை எவ்வழியில் ஆராய்ந்தாலும் உயர்தனிச் செம்மொழி என்பது உறுதி.

2. நாடு, சமயம், சாதி இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமரச உணர்வினின்று மாறுபாடுதல் தவறாம் என்று திரு.வி.க. வாதிடுவதினை விளக்குக?

நாடு: நாட்டுப்பற்று, தேசபக்தி என்னும் பெயரில் பிறநாட்டைத் துன்புறுத்துகின்றனர். இன்னொரு நாட்டைக் கைப்பற்றி அதன் வளத்தைக் கவருவதிலேயே மக்கள் நாட்டம் உடையவராய் வாழ்கின்றனர். இச்செயலை அறமாகவும் கருதுகின்றனர். இவ்வாறு கருதுவது மடமை. மேல்நாட்டினர் ஆகாய விமானங்கள், நீர்முழ்கிக் கப்பல்கள் நச்சுக் காற்று முதலியவற்றால் பிறநாட்டாரை வருத்துகின்றனர். மற்ற நாட்டாரிடமும் கடவுள் இருக்கிறார், அவர்களுக்கும் பசி முதலியன உண்டு என எண்ணுவதில்லை. இத்தகையோர்க்குச் சமரச உணர்வு தோன்றாது. எல்லா நாட்டவரும் சகோதரர் என்பதை உணராத இவர்கள் நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழக்கிறார்கள்.

சமயம்: சமயவெறியால் ஒருவன் தன் சமயத்திடம் பற்றுக் கொண்டு மற்றச் சமயத்தாரை நிந்திக்கிறான். சமயம் என்பது ஒன்றே. அதுவே சமரசமாகும். சாதி எல்லாக் கொடுமைகளிலும் தலையாயது. சாதிவெறி, பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் மனத்தில் சமரசத்தின் நிழல் படராது.

மக்களுள் பலர் சாதியையே கடவுளாகவும், சமயமாகவும் கொண்டிருக்கின்றனர். இவர்கள் சாதியை மறுத்துச் சமயத்தில் திளைத்த பெரியோரை வழிபடுவதில் பொருளில்லை. இவர்களால் நாட்டுக்கு உயர்வும் இல்லை. உரிமையுமில்லை

இவ்வாறு திரு.வி.க அவர்கள் நாடு, சமயம், சாதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சமரச உணர்வில் மாறுபடுதல் தவறு என வாதிடுகிறார்.

3. கவிதை இன்னது என்று பேராசிரியர் எஸ் வையாபுரியார் வரையறுக்க முயலும் நான்கு கருத்துகளையும் கட்டுரை வடிவில் தருக.

1. முதலாவது இயல்பு செய்யுள் வடிவம்

செய்யுள் நெறியில் இயற்றப்படுவதே கவிதை என்று நூதன ஆங்கிலப் பேரகராதி கூறுகிறது.

பலவகை உறுப்புகளைக் கொண்ட உடலுக்கு உயிர் போல, பலவகைச் சொற்களால் பொருள் பொதிந்து விளங்குமாறு, உணர்ச்சியுடன் கல்வியில் சிறந்த சான்றோரால் அழகு பெற இயற்றப்படும் செய்யுளே கவிதையாகும் என்றார் பவணந்தி முனிவர். ஆகவே கவிதையின் முதலாவது இயல்பு அது செய்யுள் வடிவில் அமைந்திருத்தல் வேண்டும்.

2. இரண்டாவது இயல்பு

கவிதையானது உலக உண்மைகளை மேற்கொள்வதைக் காட்டிலும் பாவனா சக்தியின் இயல்புகளையே மேற்கொள்ள வேண்டும்.

அது பூமியில் காலைப் பதித்து நடக்காமல் வானில் பறக்கின்ற உணர்வைத் தர வேண்டும்.

கவிதையின் பொருளை விரிவாக எடுத்துரைக்காமல், தெய்வ ஆவேசத்தால் குறி சொல்வது போல அமைதல் வேண்டும்.

பொருள்களை விளக்குவதைக் காட்டிலும், அவற்றின்மீது ஒளி பரவவிட்டு அவை தாமாகவே விளக்கமுறச் செய்தல் வேண்டும்.

புற உலகில் வெளிப்படையாக உள்ள பொருள்களோடு அமையாதபடி ஆன்ம உலகில் அது சஞ்சரித்தல் வேண்டும்.

நிலையற்ற பொருள்களோடு நின்றுவிடாதபடி நிலையாய் உள்ள பொருள்களைப் பற்றியும் அது நிகழ்தல் வேண்டும்.

3.முன்றாவது இயல்பு

கவிதை ஒரு கலை. கலை என்று கூறிய அளவில் இன்பம் விளைத்தலே அதன் தலையாய நோக்கம் என்பது வெளிப்படை. இது மூன்றாவதாக உணரத்தக்கது.

4. நான்காவது இயல்பு

கவிஞன் ஆன்மாவின் உண்மையான இயல்புகளை வெளிப்படுத்தல் வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்தும் கவிதைகளே சிறந்த கவிதைகள் ஆகும்.

கவிஞனின் தனிப்பட்ட ஆன்ம இயல்பும், பொதுப்பட்ட மக்களின் இயல்பும் சிறந்த கவிதைகளில் விளங்கி நிற்கும்.

இவ்வாறு கவிதையின் நால்வகை இயல்புகளை விரித்துரைக்கிறார் வையாபுரியார்.

4. மனித வாழ்வே பெரியது என்னும் அடிப்படையில் மு.வ. உரைக்கும் எதிர்கால கனவு யாது ?

மன்னர் ஆட்சியைக் காக்கப் பயன்பட்டதைப் போல் இன்றைய ஆட்சியையும் காக்கப் படைகளும், படைக்கருவிகளும் பயன்படுகின்றன. ஆயினும் அவற்றின் மதிப்பும், சிறப்பும் குறைந்துள்ளன. இஃது ஒரு படி முன்னேற்றமாகும்.

இன்றைய மக்கள் செய்தி இதழ்களையும், மேடைப் பேச்சுகளையும் படித்தும் கேட்டும் மயங்குகிறார்கள். இந்த மயக்கமும் தீர்ந்து விடும்.

மேடைப் பேச்சிலும், செய்தி இதழ்களிலும் வருவன எல்லாம் உண்மை அல்ல என்னும் தெளிவினால் கட்சிகளைக் கண்டு மயங்கமாட்டார்கள்

சிற்றூர்தோறும் உழைத்து வாழும் மக்கள் இந்த ஏமாற்றுத் தேர்தல் முறையே வேண்டுவதில்லை என்பார்கள்.

கிராம மக்கள் தங்கள் கூட்டுறவையும் உழைப்பையுமே நம்பி வாழத் தொடங்குவார்கள். முடி, கோல், பணம், பதவி, கட்சி, தேர்தல் என்னும் எந்தப் பெயராலும் அவர்களை ஏய்க்க முடியாது. அவை மனித வாழ்வுக்கு உதவ வந்த கருவிகள்.

கருவிகள் பயனற்றுப் போனாலும், இடையூறாகத் தோன்றினாலும், அவற்றைப் புறக்கணிக்க மனிதர்க்கு உரிமை உண்டு. அவை எல்லாம் சிறியவை. மனித வாழ்வே பெரியது.

கூட்டுறவும், உழைப்பும் மனித வாழ்விற்கு உண்மையான அடிப்படையாய் உள்ளவை. இவை உள்ளவரை மனித வாழ்வுக்குக் குறைவு இல்லை.

கூட்டுறவுக்கு இடையூறு ஏற்பட்டால் அதை வெல்ல அறப்படையும், உழைப்புக்குப் பஞ்சம் வந்தால் அதை வெல்ல உழுநிலமும் வேண்டும்.

சுரண்டுவோரும், சுரண்டப்படுவோரும் இல்லாத சாதி, சமயம், கட்சி முதலியவற்றால் ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் அமைவதற்கு இதுவே வழி என்பது மு.வ அவர்களின் எதிர்காலக் கனவாகும் .

## இலக்கிய நயம் பாராட்டுதல்
## மாணவர்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டியன.

பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், இராமலிங்கம் பிள்ளை, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை இவர்களது பாடல்களுள் ஒன்று கேள்வியாக அமைந்திருக்கும். பாடல் மிக எளிமையாக ஒரு முறை, இருமுறை நன்கு படித்தாலே பொருள் விளங்கும் வகையில் அமைந்திருக்கும்.

விடை எழுதத் தொடங்கும் முன் தலைப்பு, முன்னுரை, திரண்ட கருத்து, மையக்கருத்து, எதுகை, மோனை, இயைபு, சந்தம், இறுதியாக முடிவுரை என்ற தலைப்பிட்டு எழுதினால் விடை முழுமையாக அமையும்

| | |
|---|---|
| பாடலுக்கு ஏற்ற தலைப்பு | - 1 மதிப்பெண்கள் |
| முன்னுரை, முடிவுரை | - 1 மதிப்பெண்கள் |
| திரண்ட கருத்து | - 2 மதிப்பெண்கள் |
| மையக் கருத்து | - 2 மதிப்பெண்கள் |
| எவையேனும் 4 நயங்கள் போதும் | - 4 மதிப்பெண்கள் |

பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக்கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச் சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக.

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
　　கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
　　பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
　　நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
　　என்னுயிர் என்பேன் கண்டீர்
செந்நெல் மாற்றிய சோறும் - பசுநெய்
　　தேக்கிய கறியின் வகையும்
தன்னிகர் தானியம் முதிரை - கட்டித்
　　தயிரொடு மிளகின் சாறும்
நன்மது ரஞ்செய் கிழங்கு - காணில்
　　நாவினில் இனித்திடும் அப்பம்
உன்னை வளர்ப்பன தமிழா - உயிரை
　　உணர்வை வளர்ப்பது தமிழே

- பாரதிதாசன்

## தமிழின் சிறப்பு

முன்னுரை

பாரதியாரின் மீது கொண்ட அன்பினால் சுப்புரத்தினம் என்ற தம்பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டவர். கற்பனை இன்பம்கனிய தமிழினிமை சொட்டக் கவிபாடும் திறம் பெற்றவராதலால் பாவேந்தர் எனப்பட்டவர். தமிழ் தமிழினம் என்பனவற்றையே உயிர் மூச்சாகக் கொண்டு, அவற்றின் முன்னேற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் பாடுபட்ட பாரதிதாசன் இயற்றிய இப்பாடலில் இடம்பெற்ற இலக்கிய நயத்தைக் காண்போம்.

திரண்ட கருத்து

பலாச்சுளையும், முற்றிய கரும்பின் சாறும், மலரிலுள்ள தேனும், காய்ச்சிய பாகின் சுவையும், பசுவின் இனிய பாலும், தென்னையின் இளநீரும் இனிமையானவை. எனினும் தமிழை என் உயிராகக் கருதுகிறேன்.

நெல்சோறு, நெய் சேர்த்த காய்கறி, தன்னிகரற்ற தானியம், கட்டித்தயிர், மிளகின் சாறு, இனிக்கின்ற கிழங்கு, கண்டாலே நாவில் இனிக்கின்ற அப்பம் நம் உடலை வளர்ப்பன. ஆனால் நம் உயிரையும், உணர்வையும் வளர்ப்பது தமிழேயாகும் என்று பாரதிதாசன் கூறியுள்ளார்.

மையக் கருத்து

உலகில் பலபொருள்கள் சுவை உடையன. அச்சுவைப்பொருள்களுள் தமிழும் ஒன்றே. தமிழ் என்ற சொல்லே இனிமை என்னும் பொருளைத் தருகிறது. எனினும் பாரதிதாசன் தமிழைத் தன் உயிர் என்கிறார்.

மேலும் நம் உடலை வளர்க்கப் பல உணவுப் பொருள்கள் உள்ளன. ஆனால் நம் உயிரையும், உணர்வையும் வளர்ப்பது தமிழேயாகும் என்று பாரதிதாசன் உறுதியாய்க் கூறுகிறார்.

மேற்கண்ட பாடல்களின் மையக்கருத்து தமிழ் நம் உயிருக்கு இணையானது என்பதே.

எதுகை

அடிதோறும் முதற்சீரின் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.

| முதற்கவிதையில் | இரண்டாம் கவிதையில் |
|---|---|
| க<u>னி</u>யிடை | செ<u>ந்</u>நெல் |
| ப<u>னி</u>மலர் | த<u>ன்</u>னிகர் |
| ந<u>னி</u>பசு | ந<u>ன்</u>மது |
| இ<u>னி</u>யன எனவும் | உ<u>ன்</u>னை எனவும் இடம் பெற்றுள்ளன |

மோனை

ஓரடியில் சீர்தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை

| முதற்கவிதையில் | இரண்டாம் கவிதையில் |
|---|---|
| <u>க</u>னியிடை - <u>க</u>ழையிடை | <u>ப</u>னிமலர் - <u>பா</u>கிடை |

தன்னிகர் - தயிரொடு | நன்மது - நாவினில்
நனிபசு - நல்கிய | உன்னை - உணர்வை

இயைபு

கவிதைகளில் சீர்தோறும், அடிதோறும் இறுதியில் உள்ள எழுத்தோ, சொல்லோ ஒன்றி வருவது இயைபு.

| முதற்கவிதையில் | இரண்டாம் கவிதையில் |
|---|---|
| சுளையும் | சோறும் |
| தேனும் | வகையும் |
| சுவையும் | தானியம் |
| பொழியும் | மிளகின் சாறும் |
| பாலும் | இனித்திடும் |
| நீரும் | அப்பம் |
| எனினும் | |

சந்தம்

கவிதைகளில் எதுகை, மோனை, இயைபு, நயங்கள் அமைந்துள்ளன. ஆதலால் படிப்பவர்க்கும், படித்தலைக் கேட்பவர்களுக்கும் இன்னோசை தருவதனை உணரலாம். அவரவர் தங்கள் விருப்பம் போல் இசையமைத்துப் பாடுவதற்கு ஏற்றவாறும் அமைந்துள்ளன.

அணி

பாரதிதாசன் அவர்கள் முதற்பாடலில் இனிமை தருவதால் பல இனிய பொருள்களும் தமிழும் ஒன்றே என்று ஒற்றுமைப்படுத்திப், பின்பு தமிழை உயிர் என்று வேற்றுமைப்படுத்தியதால் வேற்றுமை அணி இடம் பெற்றுள்ளதை அறியலாம்.

ஏறிய என்னும் சொல் பொருந்திய என்னும் பொருளில் பலமுறை பயின்று வந்து ஒரே பொருளைத் தருவதால் சொற்பொருள் பின்வருநிலை அணி இடம் பெற்றுள்ளதை அறியலாம்.

இரண்டாம் பாடலில் வளர்க்கும் தொழிலால் உணவுப் பொருள்களையும் தமிழையும் ஒற்றுமைப்படுத்திப் பின்னர், உணவுப் பொருள்கள் தமிழினை வளர்க்கின்றன. தமிழ் உயிரையும் உணர்வையும் வளர்க்கின்றது என்று வேற்றுமைப்படுத்துவதால் வேற்றுமை அணி இடம்பெற்றுள்ளதை அறியலாம்.

சுவை

கவிதைகள் தமிழ்மொழியின் உயர்வைத் தெரிவிப்பதால் ஒன்பது சுவைகளுள் ஒன்றான பெருமிதச்சுவை இடம்பெற்றுள்ளதை அறியலாம்.

முடிவுரை

பாரதிதாசன் பாடல்கள் புரட்சிக் கருத்து உடையவை. மக்கள் வாழ்க்கையிலே புரட்சி, சமுதாயத்திலே புரட்சி, உள்ளத்திலே புரட்சி உண்டாக்கும் பாடல்களைப் பாடியமையால் பாரதிதாசன் அவர்கள் புரட்சிக் கவிஞர் எனப் போற்றப்பட்டார். செந்தமிழைச் செழுந்தமிழாகக் காண விரும்பியவர் ஆதலால், தமிழின் உயர்வை கவிதைகளில் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

## ஆங்கிலப் பழமொழிக்கு இணையான தமிழ்ப் பழ மொழியை எழுதுக .

1. **Man proposes God disposes**
   நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்.
2. **Familiarity breeds comtempt**
   பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
3. **Knowledge is power**
   அறிவே ஆற்றல்.
4. **Money makes many things**
   பணம் பத்தும் செய்யும்.
5. **Strike while the iron is hot**
   காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
6. **Tit for tat**
   பழிக்குப் பழி.

7. **Well began is half done**
நல்ல தொடக்கம் பாதி முடிவிற்குச் சமம்.

8. **East or west home is best**
எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.

9. **Make hay while the sunshine**
காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.

10 **Time and tide wait for none**
காலமும் நேரமும் யாருக்காகவும் காத்திருக்காது.

11. **A penny saved a penny gained**
சிறுதுளி பெருவெள்ளம்.

12. **Where there is a will there is a way**
மனமிருந்தால் மார்க்கமுண்டு.

13. **Haste makes waste**
பதறிய காரியம் சிதறும்.

14. **One flower makes no garland**
தனிமரம் தோப்பாகாது.

15. **Health is wealth**
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

16. **No pain n o gain**
மாரியல்லாது காரியமில்லை.

17. **Think before you speak**
பேசும் முன் யோசி.

18. **Think before you leap**
ஆழம் தெரியாமல் காலை விடாதே.

19. **Too much of anythink is good for nothing**
அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு.

20. **A friend ineed is a friend indeed**
ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்.

21. **Education should develop and promote good values**
கல்வி நல்ல நடத்தையை வளர்க்கும்.

22. **Keep off the grass**.
புல்லின் மேல் நடக்காதே.

23. **Congratulations for your success**
வெற்றி பெற்றமைக்குப் பாராட்டுக்கள்.

24 **Computer is one of the modern wonders of electronics**
நவீன மின்னணு சாதனங்களுள் கணிப்பொறியும் ஒன்று.

25. **An ideal teacher is a friend philosopher and guide of the students.**
ஒரு சிறந்த ஆசிரியர் மாணவர்களுக்கு நல்ல நண்பனாகவும், தத்துவவாதியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்வார்.

26. **To the good people world appears good**
நல்லவர்களுக்கு உலகம் நல்லதாகவே தெரியும்.

27. **Rain water harvest is a must to improve ground water level.**
மழைநீர் சேமிப்பு நிலத்தடி நீரின் அளவை உயர்த்தும்.

28. ‘**Villages are the backbone of our country’ said Gandhiji**

‘நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்வது கிராமங்களே’ என்று காந்திஜி கூறியுள்ளார்.

29. **Physics is closely linked with other science**.

அறிவியலின் நெருங்கிய தொடர்புடையது இயற்பியலே.

## பழமொழியை வாழ்வியல் நிகழ்வில் வைத்து எழுதுதல்

(அ) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்

பழமொழி விளக்கம்

ஒருவர் திறன் மிகுந்தவராக இருந்தாலும், அவர் திறன் மேலும் சிறக்க தூண்டுதல் அவசியம். எரிசுடரைத் தூண்டி மேலும் பிரகாசமாக எரியச் செய்வது போல, படிக்கும் மாணவராக இருந்தாலும் ஆசிரியரின் தூண்டுதலின் பேரில் அவன் வளர முடியும்.

வாழ்வியல் நிகழ்வு

காஞ்சனா நன்கு படிக்கும் மாணவி. எல்லாப் பாடத்திலும் நல்ல மதிப்பெண் எடுப்பாள். ஆனால் வகுப்பில் முதல் மாணவியாக இருக்கவில்லை. அவளுடைய திறமையை அடையாளம் கண்ட ஆசிரியை, “நீ மேலும் முயன்றால் மாநிலத்திலேயே முதல் மாணவியாக வருவாய்” என்று ஊக்க மொழிகள் தந்து கொண்டிருப்பார். காஞ்சனாவும் அந்த ஊக்க மொழிகளால் உந்தப்பட்டு அரசுத் தேர்வில் மாநில முதன்மைப் பெற்றாள். சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் என்னும் பழமொழி காஞ்சானவுக்கு மெய்யாகிப் போனது

இவற்றைப் போலவே கீழுள்ள தலைப்புகளையும் வாழ்வியல் நிகழ்வில் வைத்து எழுதுக.

(அ) சிறுதுளி பெரு வெள்ளம்.

(ஆ) முயற்சி திருவினையாக்கும்.

(இ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.

(ஈ) தன்கையே தனக்குதவி.

### வல்லின மெய்களை இட்டெழுதுக

1. இந்த ஓவியத்தில் அமைந்த வண்ண செறிவும், ஓவிய பொலிவும் நம்மை கவர்கின்றன.
   விடை: இந்த ஓவியத்தில் அமைந்த வண்ணச் செறிவும், ஓவியப் பொலிவும் நம்மைக் கவர்கின்றன.
2. ஏட்டு சுவடிகளில் சித்த மருத்துவ செய்திகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.
   விடை: ஏட்டுச் சுவடிகளில் சித்த மருத்துவச் செய்திகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.
3. வேட்டுவ பெண்கள் விளையாட போவதுண்டு என்றுச் சஞ்சீவி பர்வதச் சாரல் பாடுகிறது.
   விடை: வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு என்று சஞ்சீவி பர்வதச் சாரல் பாடுகிறது.
4. அறிவுகுறைவு கவனகுறைவு திறமைகுறைவு ஆகியவற்றால் விபத்துக்கள் உண்டாகின்றன.
   விடை: அறிவுக்குறைவு கவனக்குறைவு திறமைக்குறைவு ஆகியவற்றால் விபத்துகள் உண்டாகின்றன.
5. போதை பழக்கத்தால் ஊசிகளை பகிர்ந்து கொண்டால் எய்ட்ஸ் நோய்க்கு காரணம் ஆகும்.
   விடை:போதைப் பழக்கத்தால் ஊசிகளைப் பகிர்ந்து கொண்டால் எய்ட்ஸ் நோய்க்கு காரணம் ஆகும் .
6. வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள்.
   விடை: வெந்தயச் செடிகளின் மேல் மின்னிடும் தங்கப் பூக்கள்.
7. சாரை பாம்பு குருவி கூட்டில் நுழைந்தது.
   விடை: சாரைப் பாம்பு குருவிக் கூட்டில் நுழைந்தது.
8. கிட்ட போனால் முட்ட பகை.
   விடை: கிட்டப் போனால் முட்டப் பகை.
9. ஓட காண்பது வெள்ளம் ஒடுங்க காண்பது யோகியர் உள்ளம்.
   விடை: ஓடக் காண்பது வெள்ளம் ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்.

10 படைப்பு பலபடைத்து பலரோடுண்ணும் செல்வம்.
   விடை படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணும் செல்வம்.

## வல்லின மெய்களை நீக்கி எழுதுக

1. வாழ்கத் தமிழ் என்று அவனாச் சொன்னான் அறிந்துச் சொல் எனக்கு.
   விடை: வாழ்க தமிழ் என்று அவனா சொன்னான் அறிந்து சொல் எனக்கு.
2. நீரோச் சோறோ எதுக் கிடைத்தாலும் உண்டுச் செல்வேன்.
   விடை: நீரோ சோறோ எது கிடைத்தாலும் உண்டு செல்வேன்.
3. சோறுக் கொதிக்கிறது போத்தம்பி அடுப்பைக்குறை என்றவுடன் சென்றுப் பார்த்தான்.
   விடை: சோறு கொதிக்கிறது போ தம்பி அடுப்பைக் குறை என்றவுடன் சென்று பார்த்தான்.
4. வெண்ணிலாக் கலக்கல வென்றுச் சிரித்தாள்.
   விடை: வெண்ணிலா கலகல வென்று சிரித்தாள்.
5. குபுக்குபுவென்றுப் புகை மண்டிலம் சூழ்ந்தது.
   விடை: குபு குபு வென்று புகை மண்டிலம் சூழ்ந்தது.
6. துறவிக் குடிலுக்குள் வந்தச் சிறுவர் இரண்டுப் பேர்.
   விடை: துறவி குடிலுக்குள் வந்த சிறுவர் இரண்டு பேர்.

## பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளை நீக்குக

1. சென்னைக்கு அருகாமையில் இருப்பது கன்னியாகுமரி அல்ல.
   சென்னைக்கு அருகில் இருப்பது கன்னியாகுமரி அன்று.
2. செய்திகள் வாசிப்பது அறிவழகன்.
   செய்திகள் வாசிப்பவர் அறிவழகன்.
3. என் தங்கை நேற்று வந்தது.
   என் தங்கை நேற்று வந்தாள்.
4. புலி வந்தன எருதுகள் ஓடியது.
   புலி வந்தது எருதுகள் ஓடின.
5. ஒன்றோ அல்லது இரண்டோ தருக.
   ஒன்றோ இரண்டோ தருக.

## பின்வரும் தொடர்களில் உள்ள கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக

1. வெடியங்காட்டியும் வெத்திலை போடறது ஒரு பளக்கமா ?
   விடியும் முன் வெற்றிலை போடுவது ஒரு பழக்கமா?
2. அப்பிசி மாசம் அடமள இம்பாங்க.
   ஐப்பசி மாதம் அடைமழை என்பார்கள்.
3. சித்த நாழி உக்காரு இந்தா வந்திடறேன்.
   சில நாழிகை உட்கார். இதோ வருகிறேன்.
4. கோளிமுட்டை தாவாதத்தில் உருண்டது.
   கோழி முட்டை தாழ்வாரத்தில் உருண்டது.
5. கொடுத்த சேதியைக் கோர்வையாய்ப் பேசு.
   கொடுத்த செய்தியைக் கோவையாய்ப் பேசு.

## பிறமொழிச் சொற்களை நீக்கித் தமிழில் எழுதுக

1. நமஸ்காரம் என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை ஆசிர்வதித்தேன்.
   வணக்கம் என்று நெடுஞ்சாண் கிடையாய் (உடம்பு முழுவதும் தரையில் படுமாறு) விழுந்தவனை வாழ்த்தினேன்.
2. என் ஜேஷ்ட புத்திரனின் ஜானவாசத்திற்கு சகலரும் வரணும்.
   என் மூத்த மகனின் மணமகன் அழைப்பிற்கு அனைவரும் வர வேண்டும்.

3. ஸ்ரீமான் வ.உ.சிதம்பரம் பிள்ளையின் நாமகரணத்தை இந்தக் கப்பலுக்குச் சூட்டுவதில் ஸந்தோஷமடைகிறேன் என்றார் ராஜாஜி.

திருவாளர் வ.உ.சிதம்பரம் பிள்ளையின் பெயரை இந்தக் கப்பலுக்குச் சூட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன் என்றார் மூதறிஞர் இராஜாஜி.

4. பிரயாணி பிரயாணத்தை ரத்து செய்தவுடன் ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டது.

பயணி பயணத்தை நீக்கம் செய்தவுடன் கட்டணத்தொகை வழங்கப்பட்டது.

5. செல்வனுக்கும் கிள்ளைக்கும் தலா ஐந்து புஸ்தகம் கொடு.

செல்வன். கிள்ளை ஆகிய ஒவ்வொருவருக்கும் ஐந்து புத்தகங்கள் கொடு.

## ஆங்கிலச் சொற்களை நீக்கித் தமிழில் எழுதுக

1. “டி.வியில் சீரியல் பார்க்காவிட்டால் லைஃபே போர் அடித்துவிடும்” என்கிறாள் பாட்டி.

“தொலைக்காட்சியில் தொடர்களைப் பார்க்காவிட்டால் வாழ்க்கையே வெறுத்துவிடும்” என்கிறாள் பாட்டி.

2. டயாபெட்டிக் பேஷண்ட் ஸ்வீட் ப்ரூட்ஸ் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்.

சர்க்கரை (நீரிழிவு) நோயாளி இனிப்பு பழங்கள் சாப்பிடுவதை நிறுத்த வேண்டும்.

3. ஸ்லிம்மாக இருப்பதே பியூட்டி என்ற எண்ணம் பரவி வருகிறது.

மெலிவாய் (ஒல்லியாய்) இருப்பதே அழகு என்ற எண்ணம் பரவி வருகிறது

4. “வீக் ஆன என் ஆன்ட்டிரெஸ்ட் எடுக்க வேண்டும்” என்று ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் அட்வைஸ் கூறினார்

“வலிவற்ற என் அத்தை ஓய்வு எடுக்க வேண்டும்” என்று இதய மருத்துவ வல்லுநர் அறிவுரை கூறினார்.

5. இந்த செஞ்சுரி டென்ஷன் நிறைந்தது.

இந்த நூற்றாண்டு மன அழுத்தம் நிறைந்தது.

## எழுத்துப் பிழைகளை நீக்கி எழுதுக

1. நெள் வயிழிள் கலை பரித்த போது அறவு கடித்தது.

நெல் வயலில் களை பறித்தபோது அரவு கடித்தது.

2. குளந்தையின் அளுகையை மாட்றதாய் வாளைப்பளம் தந்து தாலாட்டுப் பாடினால்.

குழந்தையின் அழுகையை மாற்ற தாய் வாழைப்பழம் தந்து தாலாட்டுப் பாடினாள்.

3. ஏறிகளில் மலைநீர் சேமித்தாள் கிணருகளில் நீர் வற்றாது.

ஏரிகளில் மழைநீர் சேமித்தால் கிணறுகளில் நீர் வற்றாது.

4. பல்லியில் மணி ஒளித்ததும் மாணவர்கள் களைந்தனர்.

பள்ளியில் மணி ஒலித்ததும் மாணவர்கள் கலைந்தனர்.

5, ஆற்றில் வெல்லம் வந்தது வீட்டில் வெள்ளம் இருக்கிறது.

ஆற்றில் வெள்ளம் வந்தது வீட்டில் வெல்லம் இருக்கிறது.

## பொருள் வேறுபாடு அறிக

1. திணை : மக்கள், தேவர் ஆகியோர் உயர்திணையில் அடங்குவர்.

தினை : மலை நிலத்தில் தினை பயிரிடப்பட்டது.

2. ஊண் : வேளை தவறாமல் ஊண் உண்டு உடம்பைக் காத்துக் கொள்.

ஊன் : உயிர்க்கொலை புரிந்து ஊனைச் சாப்பிட்டால் இறையருள் எப்படிப் பெற முடியும்.

3. இலை : வாழை இலையில் உணவு உண்பது உடலுக்கு நல்லது.

இளை : உடல் நிலை சரியில்லாததால் தம்பி இளைத்து விட்டான்.

4. வலை : மீன் பிடிக்க வலையைப் பயன்படுத்துவார்கள்.

வளை : எலி வளை(பொந்து )யானாலும் தனி வளை வேண்டும்.

5. தலை : (சிரசு)உடல் உறுப்புகளில் தலை முதன்மையானது.

தளை : (கட்டுதல்)திருடனை தளையிட்டு அழைத்துச் சென்றார்கள்.

6. அலை : கடலலையைக் கண்டு மகிழ்ந்தேன்.
   அழை : என் நண்பனை அழைத்தேன்.
7. கலை : ஆயக்கலைகள் அறுபத்து நான்கு என்பர்.
   கழை : (மூங்கில்) கழையால் கூடை முடைவார்கள்.
8. ஒலி : (ஓசை) பாடலின் ஓசை கேட்டு மகிழ்ந்தேன்.
   ஒளி : (வெளிச்சம் )சூரிய ஒளி பிரகாசிக்கிறது.

## வடமொழிப் பெயர்களுக்கு முன்பு வழங்கிய தமிழ்ப் பெயர்கள்

1. ஸ்ரீரங்கம் - திருவரங்கம்
2. வேதாரணியம் - திருமறைக்காடு
3. மீனாட்சி - அங்கயற்கண்ணி
4. சிதம்பரம் - திருச்சிற்றம்பலம்
5. கும்பகோணம் - குடமூக்கு
6. கட்கநேத்ரி - வாள்நெடுங்கண்ணி
7. விசாலாட்சி - நீள்நெடுங்கண்ணி

## மரபுச் சொற்களை அறிக.

1. பலாப் பிஞ்சு - பலாமூசு
2. வாழைப் பிஞ்சு - வாழைக்கச்சல்
3. முருங்கைப் பிஞ்சு - முருங்கைச் சரடு
4. அவரைப் பிஞ்சு - அவரைப்பொட்டு
5. மாம்பிஞ்சு - மாவடு
6. இளந்தேங்காய் - வழுக்கை

## பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டெழுதுக.

1. "ஒழுக்கமுடைமை குடிமை" என்பது திருவள்ளுவர் வகுத்த வரையறையாகும்.
2. "உலகம் நாடாகவாவது இருக்கட்டும்; காடாகவாவது இருக்கட்டும்; எங்கே நல்லவர்களிருக்கின்றார்ளோ அங்கே அதுவும் நல்லதாக இருக்கும்".
3. "கவிதை இது அல்ல, இது அல்ல, என எளிதில் கூறி விடலாம். ஆனால், இன்னதுதான் கவிதை என்று வரையறுத்தல் எளிதல்ல" என்று ஜான்சன் பதில் கூறினாராம்.
4. சமரசம் வாழ்வில் நுழைந்து ஆட்சிபுரியின், உலகில் போர் ஏது? பூசல் ஏது? புரட்சி ஏது?
5. இஃதென்ன அறியாமை! சமயமென்பது ஒன்றே. அதுவே சமரசம் என்பது.
6. ஒருவன் 'ஒழுக்கத்தை இழந்தால் அனைத்தையும் இழந்தவனாகிறான்' என்றனர்.
7. ஆன்மா என்னும் சொல் உயிரையும், ஆத்மா என்னும் சொல் உடம்பையும் குறிக்கும். உடல், உள்ளம், உயிர் என்னும் வரிசையில் ஆன்மாவும், ஆத்மாவும் உள்ளன.
8. "இன்னது தான் கவிதை என்று வரையறுத்தல் எளிதல்ல" என்று ஜான்சன் பதில் கூறினார்.

கீழ்க்காணும் வினாக்களுக்குரிய விடைகளையும் ஊன்றிக் கற்றிடுக. தேர்வு நோக்கில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற வினாக்கள் இவைகள்.

1. தமிழ் உயர்தனிச் செம்மொழி என்று உரைக்கப்படக் காரணங்கள் யாவை ?
2. பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்களைப் பற்றி எழுதுக.
3. தமிழ் மொழியின்மீது பற்றுக் கொள்ளாத தமிழ் மக்களைப் பரிதிமாற்கலைஞர் கடித்துரைப்பது யாங்ஙனம் ?
4. பழந்தமிழ் மாந்தர் பெரிய முயற்சியையே மதித்து ஒழுகினர் என்பதனை விளக்குக.
5. மொழியைக் கொண்டு சமரசத்திற்குக் கேடு சூழ்பவர்களைப் பற்றித் திரு.வி.க வழிநின்று ஆய்க.
6. ஈகைப் பண்பில் தமிழ் மக்கள் சிறந்து விளங்கிய தன்மையை விளக்குக.
7. கற்களை அடுக்கி அமைக்கப்பட்டுள்ள கோவில்கள் பற்றி எழுதுக.

8. தமிழர்கள் பழங்காலந்தொட்டே பல கலைகளையும் பேணி வந்துள்ளனர் என்பதை விளக்குக.
9. ‘ஆயன் என்ற பெயரே அரசனைக் குறிக்கும் கோ எனப்பட்டது’ என்பதனைப் பாவாணர் வழிநின்று விளக்குக.
10. இசைத் தமிழ் என்பது யாது? முற்காலத்தும் இக்காலத்தும் விளங்கும் இசைத்தமிழ் நூல்கள் யாவை?

### துணைப்பாடக் கட்டுரைகளில் தேர்வு நோக்கில் முக்கியத்துவம் வாய்ந்தவை

1. கதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கிவரைக.
   1. பால்வண்ணம் பிள்ளை
   2. சட்டை
   3. மூக்கப் பிள்ளை வீட்டு விருந்து
2. கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்தல்
   1. மண்
   2. வேலி
3. சொந்தக் கற்பனையில் கதை எழுதுதல்
   1. உல்லாசப் பயணம்.

--------------முற்றும்------------